www.tamilarangam.net

# ஈழச்செய்தி

## EPIC

ஈழமக்கள் செய்தித்தொடர்புநிலையம். த.பெ. இல. 5551 சென்னை.

கடிதம் 34 — மார்ச்-மே-87




★ இழப்புக்கள் பல ஏற்படினும் போராட்டத்தில் மக்கள் உறுதி.

★ 'அனைத்து ஈழவிடுதலை இயக்கங்களும் ஐக்கியமாக போராடி இருப்பின் சிறீலங்கா இராணுவம் முன்னேறி இருக்கமுடியாது'-ஈழமக்களின் கருத்து.

★ ஐக்கியத்திற்கு எதிரானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே இழப்புக்களுக்கு இவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.

★ யாழ்ப்பாணம் மீது சிறீலங்காஇராணுவம் மும்முனைத் தாக்குதல் பல புதிய இராணுவ முகாம்கள் அமைப்பு.

★ ஈழமக்களில் □ 3000 இற்கு மேற்பட்டோர் பலி □ 5000 இற்கு மேற்பட்டோர், படுகாயம் □ 3500 பேர் கைது □ 3 லட்சம் பேர் குடியிருப்புக்களை இழந்து அகதிகள் ஆகினர் □ பாடசாலைகள், கோவில்கள், மருத்துவமனைகள் குண்டு வீசித் தகர்ப்பு சிறீலங்கா இராணுவத்தின் சாதனைகள் இவை.

★ பட்டினியால் வாடும் ஈழமக்களுக்கு இந்தியா உணவு, மருந்து விநியோகம் மக்கள் மகிழ்ச்சி வரவேற்பு.

★ இழப்புக்கள் மலைபோல் ஏற்படினும மலையைவிட உறுதியாய் நின்று போராடுவோம்.

---

**மனித விரோத சக்திகளை ஒழிப்போம்!**


**மனித ஜனநாயகத்தை நிறுவுவோம்!**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மனித விரோத சக்திகளை எதிர்த்து, ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து போராடி ஈழத்தை வெல்வோம் !

### ஆசிரியர் குறிப்புரை



ஈழதேச விடுதலைப் போராட்டம் ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் தற்போதுள்ளது. ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் தனது கால்களை ஆளப்பதிந்து எமது மண்ணை ஆக்கிரமித்து வருகிறது. எமது வளத்தை நாசப்படுத்தி வருகிறது. எமது மக்களை கொன்று குவித்து வருகிறது. சிறீலங்கா அரசானது தனது இராணுவ நடவடிக்கைகளை கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் முன்னெப்போதையும் விட உக்கிரமாக்கி வருகிறது. பல புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவ விமானத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவ கடல் இறங்கு துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. **ஈழத்தின் 25 வீதமான பகுதி இராணுவ முகாம்களாகவும் 50 வீதமான பகுதி இராணுவத்தின் ஆயுத வீச்சிற்கு இலகுவில் அகப்படக்கூடிய பகுதிகளாகவும் உள்ளன.** சிறீலங்கா அரசானது மேலும் இராணுவ முகாம்களை அமைத்தல் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை பலப்படுத்தி விஸ்தரித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்க C. I. A., இஸ்ரேலிய மொசாட் போன்றவற்றின் பிரதிநிதிகள் இம்முகாம்களில் தங்கியிருந்து நேரடியாக தமது ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களில்விசேட அதிரடிப்படை, ஊர்காவற்படை குண்டர்களுடன் இணைந்து கிராம அழிப்பு, பொருளாதார நாசம்பண்ணுதல், மக்களை கொல்லுதல் போன்ற அட்டூழியங்கள் செய்து வருகின்றனர். இப்பிரதேசங்களில் ஒரு கிலோ மீற்றருக்கு ஒரு இராணுவ முகாம் என்ற வகையில் முகாம் அமைத்து எமது மண்ணை ஆக்கிரமித்து' வருகின்றனர். **மலையகத்தில் 'புலிகள் வந்திருக்கிறார்கள் என்று பூச்சாண்டி காட்டி புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.** அப்பாவி தொழிலாளர்க்ள் கைது செய்து சித்திரவதை செய்து வருகின்றனர் தொழிலாளர்களின் போராட்டங்கள் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்துகின்றனர்.

இவை எல்லாவற்றை விட சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் **பொருளாதார தடை, பொருளாதார இலக்குகள் மீதான முற்றுகை** சகல தரப்பு மக்களையும் பட்டினிச்சாவை நோக்கி விரட்டுகிறது. முகாம் விஸ்தரிப்புகளால் ஏற்கனவே நிலங்களையும் வீடுகளையும் இழந்த மக்கள் உழைக்க வழியின்றியும் இருக்க இடமின்றியும் தவிக்கின்றனர். கடற்பாதுகாப்பு வலையம், போடப்பட்ட நாட்களில் இருந்து இன்றுவரை கடற்தொழிலாளர்கள் ஒரு வேளையேனும் வயிறாறச்சாப்பிட முடியவில்லை. எரிபொருள் தடை, உணவுத்தடை போன்ற அத்தியாவசிய பொருள்களின் தடைகளினால் உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது உற்பத்தியோடு தம்மை இணைத்துக்கொண்ட சகல தரப்பினரும் அன்றாட உழைப்பின்றி பட்டினியால் வாடுகின்றனர். இத்தனை கஷ்டங்களின் மத்தியிலும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்த முடியாத வகையில வாகனத்தடைச்சட்டம், தடை முகாம்களில் பரிசோதித்தல் என்ற முறைகளை சறீலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது.

ஈழத்து நிலைமைகள் இவ்வாறு எனில் சிறீலங்காவில் சிங்கள இளைஞர்கள் **வடபகுதிப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். அரசைக் கவிழ்க்க முனைந்தார்கள்** என்று கூறிக்கொண்டு கைது செய்து வதை முகாம்களில் போட்டு வதைக்கின்றனர். சிறீலங்கா இராணுவத்தினர். சர்வதேச அரங்கில் இழந்து வரும் தனது செல்வாக்கை நிலை நிறுத்தவும் பொருளாதார நெருக்கடிகளினால் ஏற்படும் பிரச்சனைகளில் இருந்து மக்களைத் திசை திருமபும் நோக்குடனேயே இவ்வாறு செய்து வருகின்றது சிறீலங்கா அரசு.

இவை ஒருபுறம் இருக்க ஈழத்தின் சகல பகுதிகளிலும் **தமிழீழ விடுதலைப்புலிகள்** சகலதரப்பு மக்களையும் ஈழத்திற்காக போராடும் இயக்கங்களையும் பொது ஸ்தாபனங்களையும் ஏனைய ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் தனது கோரப்பற்களால் கொன்று குவித்து வருகின்றது. சிறீலங்கா அரசின் கோரப்பிடியில் இருந்து எம்மக்களைக் காப்பாற்றுவதற்காக போராடும் இயக்கங்களை போராடவிடாமல் தடை செய்கின்றது. போராளிகளை கொலை செய்கின்றது, சித்திரவதை செய்கின்றது. **சிறீலஙகா அரசின் இனப்படுகொலைகளுக்கு எவ்வகையிலும் குறைபாத வகையில தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களை கொன்று வருகின்றது.** ஈழப்போராட்டத்தின் ஏகப் பிரதிநிதி தானே என்று தனச்குத்தானே பட்டம் சூட்டிக் கொண்டு **இயக்க ஐக்கியத்து எதிராக செயல்பட்டு இயக்கங்களை பலவீனப்படுத்தி சிறீலங்கா அரசை பலப்படுத்து**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கின்றது. இதனால் இராணுவம் இலகுவில் முன்னேறி முகாம்களை அமைத்து மக்களை அழித்தொழித்து வருகின்றது.**

எந்தவொரு ஜனநாயக ரிதியான கருத்துக் களையோ போராட்டங்களையோ முன்னெடுக்க முடியாத நிலை புலிகள் பற்றி கருத்துத் தெரிவித் தால் பச்சை மட்டை அடி அல்லது 500/= தண்டம் அல்லது இரண்டும். இவர்கள் என்ன அரசர் காலத்து பண்ணையார்களா? **மக்களுடனும் ஏனைய ஈழவிடு தலை இயக்கங்களுடனும் துப்பாக்கி முனைகளுடாக பேசும் இவர்கள் சிறிலங்கா இராணுவத் தின் தள பதிகள் கொத்தலாவலை விஜயசேகரா (இவர்கள் தான் கடந்த 2 வருடங்களாக யாழ்பாணத்து மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்து எங்கள் தேசத்து வளங்களை நாசப்படுத்தியவர்கள்) போன்றவர் களுடன் கைகோத்துக்கொண்டு நகர வீதிகளில் ராணுவ அணிவகுப்புக்களுடன் பவனி வருகின்றனர், விருந்து படைக்கின்றனர். போராளிகளின் முகாம்களை காட்டுகின்றனர்.** புலிகள் அமெரிக்க, இஸ்ரேலிய ஏகாதிபத்திய நாடுகளின் அடிவருடிகள் சிறிலங்கா அரசின் நேசசக்திகள்.

ஈழ தேசத்தில் இவ்வாறு என்றால் சிறிலங் காவில் புலிகளின் சகோதரன் **ஜனதா விமுத்தி பெர முனை என்ற ஜே வி பி** புலிகளைப்போன்ற செயற் பாடுகளையே மேற்கொண்டு வருகின்றனர். **சுதந் திர மாணவர் அமைப்பைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் தயாபத்திரன** என்பவரை இவர்களே கொன்றனர். பின்பு ஏதேதோ காரணம்கூறி கொக் கரிக்கின்றனர். இவர்கள் **''இந்திய விஸ்தரிப்பு வாதம்''** என்ற தாரக மந்திரத்தால் அப்பாவி சிங்கள மக்களை தமிழ் மக்கள் மீது ஏவி இனப்படு கொலைக்கு மேலும் மேலும் தூபம் இடுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளில் இன்று இலங்கை (ஈழம்+சிறிலங்கா) உள்ளது. இந்நிலையில் **ஈழத்தில் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் மக்களின் நலன்களின் அடிப்படையில் தமக்கிடையே ஓர் ஐக்கி யத்தை ஏற்படுத்தி ஈழத்தின் எதிரியான சிறீலங்கா அரசையும் பாசிச தமிழ் ஈழ விடுதலைப்புலிகளையும் வென்று மக்களையும் மக்களின் ஜனநாயகத்தையும் காப்பாற்றி ஈழத்தை வென்றெடுக்க வேண்டும்.** இதே போலவே சிறிலங்காவில் உள்ள ஜனநாயக முற் போக்கு சக்திகள் தமக்கிடையே ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும்

***அனைத்து ஜனநாயக முற்போக்கு, தேசபக்த சக்திகளும் ஐக்கியப்பட்டு ஜனநாயக விரோத, மக்கள் விரோத சக்திகளை ஒழிப்போம். ஈழமக்களின் மனித உரிமைகளை மீட்டு சுதந்திர ஈழத்தைப் படைப்போம்.*** *

***மார்ச் 1***

வெற்றிமுரசு என்ற பத்திரிகை ஈழமக்கள் குழு ஒன்றினால் வெளியிடப்பட்டு வருகின்றது. இப் பத்திரிகையில் உள்ள முற்போக்கு கருத்துக்கள் காரணமாக இது மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுகின்றது. இதில் புலிகளினால் மேற் கொள்ளப்படும் மக்கள் விரோத செயல்பாடுகள் பற்றியும் சமகால அரசியல் நிகழ்வுகள் பற்றிய செய்திகளும் முதன்மைப்படுத்தி வெளிவருகின்றன. இப்பத்திரிகையை நடத்துபவர்களை தேடி புலிகளின் கொலைகார உளவுப்படை தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளது இப்பத்திரிகை வைத்திருப்பவர்களை புலிகள் கைது செய்து தமது வதைமுகாமில் சித்திர வதை செய்து வருகின்றனர்.

***மார்ச் 2***

★ ஈ பி ஆர் எல் எப் போராளிகள் அம்பாறையில் இராணுவம் மீது தாக்குதல்

கடந்த 2-3-87 அன்று இரவு 10-00 மணி யளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பௌத்த புனித நகர் திட்டத்தினுள் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுவரும் திகவாவி நகரின் அண்மையில் உள்ள மாணிக்கமடு என்னும் தமிழ் கிராமம் மீது இன அழிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக வந்த இராணுவத்தினர் மீது ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் (PLA) கண்ணி வெடித்தாக் குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் அவர் கள் பயணம் செய்த ஒரு ஜீப் வண்டி முழுமையாகச் சேத மடைந்துள்ளது தொடர்ந்து நடைபெற்ற நேரடி மோதலில் இராணுவத்தினர் பலர் கொல்லப் பட்டனர். மேலும் மக்கள் விடுதலைப்படையினர் எவ்வித 'இழப்புக்களும் இன்றி இராணுவத்தினரின் ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா அரசானது முஸ்லீம் மக்களதும் தமிழ் மக்களதும் விவசாய நிலங்களை சுவீகரித்து புதிதாக இச்சிங்களக் குடி யேற்றத்திட்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. அந்ன விஸ்தரிப்பே மாணிக்கமடுவில் உள்ள தமிழ் மக்களை யும் அழிக்கும் வேலைகளில் இராணுவம் முனைந் துள்ளதோடு புதிதாக அத்திட்டத்தின் பாதுகாப் பிற்கென திகவாவியில் தற்காலிக இராணுவ முகாம் ஒன்றையும் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

***மார்ச் 3***

நாவற்குழி இராணுவமுகாமில் இருந்து கைதடி, அரியாலை, கோப்பாய் இருபாலை போன்ற மக்கள் குடியிருப்பு கிராமங்கள் மீது ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. 3 'ஹெலி' மக்கள் குடியிருப்புக் கள் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொண்டன. இதில் பல பொதுமக்கள் பலத்த காயத்திற்குள்ளாயினர்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மண்டைதீவு கடலில் கடற்படை கப்பல் ஒன்றில் இருந்து யாழ்கோட்டை முகாமிற்கு பல நவின ரக ஆயுதங்கள் இறங்கப்பட்டன. பன்குளத்தில் வைர முத்து (49), பரமேஸ்வரி (45), வல்லிபுரநாதன் (54) கைலநாதன் (40), ராஜநாதன் (42) செல்வலஷ்மி போன்ற அப்பாவி மக்களை கைது செய்து முகாமிற்கு அழைத்துச்சென்ற சிறிலங்கா இராணுவம் அங்கு இவர்களை எவ்வித காரணமும் இன்றி சுட்டுக் கொன்றனர்.

* தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜன கல்லூரி போன்ற இடங்களின் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படை குண்டு மாரி பொழிந்ததில் பல பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். பல வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானது.

### மக்கள் விடுதலைப்படைத் தாக்குதலுக்கு மூன்று கமோண்டக்கள் பலி!

* மட்டக்களப்பு மாவட்டம் மாங்காடு என்னும் தமிழ் கிராமத்தை விஷேட கமோண்டோப் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் முயற்சிகளைத் தொடங்குவதற்காக வந்தபோது அவர்களை எதிர்கொண்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் மக்கள் விடுதலைப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விசேட கமோண்டோ படைப் பிரிவைச் சேர்ந்த மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

* அண்மைக்காலமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் போலீஸ் கமோண்டக்கள் பொதுமக்களை சுட்டு அழித்து வருவதால் அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படையினர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**மார்ச் 4**

சிறிலங்கா விமானப்படை விமானம் ஒன்றிலிருந்து பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் பலாலி இல் இறக்கப்பட்டன. யாழ்கோட்டை இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புக்கள் மிது ஏவப்பட்ட 'ஷெல்'ஆல் 3 பொதுமக்கள் பலத்தகாயமடைந்தனர். பல குடியிருப்புக்கள் சேதமடைந்தன.

### மக்களை நேசித்தவர்கள் மரணத்தை தழுவினர்

மட்டக்களப்பு மருதமுனைக் கிராமத்தில் விசேட அதிரடிப்படையுடன் நடைபெற்ற நேரடி மோதலில் தோழர் குமார் (சண்முகானந்தசிவம்) (சுபாஷ், முருகேஷ்) (மத்திய குழு உறுப்பினர்) தோழர் அருள் பரிமளராஜ் (தம்பி) (மட்டக்களப்பு பிராந்திய தளபதி) தோழர் நவீனன், கமலன் வீரமரணம் அடைந்தனர். தோழர் குமார் சாதாரண வறிய விவசாய குடும்பத்தில், தம்பிலுவில் பிறந்து 1977-ம் ஆண்டு ஈழ மாணவர் பொதுமன்றத்தில் தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்டவர். 1978-ம் ஆண்டு மட்டக்களப்பு பகுதியில் ஏற்பட்ட சூறவளி அழிவுகளின்போது அம்மக்களின் புனர்வாழ்வு வேலைகளினால் தனது அரசியல் வேலைகளை ஆழப்படுத்தியவர். அம்பாறை விவசாய பண்ணையில் கல்வி கற்றும் அங்குள்ள விவசாயிகள் மத்தியிலும் கஞ்சிக்குடியாற்றில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் தனது வேலைகளை ஆழப்படுத்தி வேலை செய்தவர். 1983 ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 12 உறுப்பினர்களுடன் மட்டக்களப்பு சந்திரக் கொண்டானில் சிறிலங்கா அரசின் கூலிப்படைகளினால் கைது செய்யப்பட்டார். பின்பு 1983 செப்டம்பர் மாதம் EPRLF இன் ஆயுதப்படையான PLA இனால் மேற்கொள் ளப்பட்ட மட்டுநகர் சிறை உடைப்பின் போது இவரும் சிறையில் இருந்து கொண்டே செயற்பட்டு சிறை மீண்டார். பின்பு EPRLF இன் இராணுவ முகாமில் பயிற்சி பெற்று மக்கள் விடுதலைப்படையில் அரசியல் கமிசராக பணியாற்றினார். 1984 மட்டக்களப்பு திரும்பி EPRLFஐ பலமாகக் கட்டியமைத்து வேலைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். இவருடன் படைப்பிராந்திய தளபதி தோழர் அருளும் இணைத்து செயற்பட்டு மட்டக்களப்பு பிராந்தியத்தில் EPRLF ஓர் ***அரசியல் இராணுவ பலம் வாய்ந்த இயக்கமாக அமைத்தார்.*** இவ்வாறு அங்கு வேலை செய்யும்போது வறிய விவசாயிகள் மத்தியிலும் செறன்டிப் கடற் தொழிலாளர் பண்ணைத்தொழிலாளர் மத்தியிலும் தனது அரசியல் வேலைகளை ஆழப்படுத்தினார். ஈழவிடுதலை போராட்டம் இக்கட்டான ஓர் நிலைமையை அடைந்திருக்கும் இவ் வேளையில் தோழர்களின் இழப்பு EPRLF இன் இழப்பு மாத்திரம் இல்லை. ஒட்டுமொத்த ஈழ விடுதலைக்கான இழப்பும் ஆகும். மக்களுக்காக மரணித்த இப்புதல்வர்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வீர அஞ்சலியைச் செலுத்துகிறது.

**மார்ச் 5**

ஈழமக்களின் விடுதலைக்காக சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக தனது மோட்டார் தாக்குதல்களால் பல தடவைகள் மக்களையும் மண்ணையும் ஈ பி ஆர் எல் எப் காத்திருக்கின்றனர். இதேபோல் டெலோ, புளொட் ஆகியோரும் இராணுவத்தினரிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக செயல்பட்டு இருகின்றனர் இவர்கள் மீது புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ மேலாதிக்க பாசிச நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஈ பி ஆர் எல் எப், புளொட், டெலோ போன்ற இயக்கங்களும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களுக்காக போராடுவதை புலிகள் தடை செய்வதை கண்டித்தும் யாழ்வாசி என்ற பெயரில் ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. இப்பிரசுரம் மக்கள் மத்தியில் பரவலாக புலிகளுக்கு தெரியாதவாறு விநியோகிக்கப்பட்டது.

□ தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளான அமெரிக்க இஸ்ரேல் போன்ற நாடுகளுக்குமிடையே உள்ள உறவுகள் பற்றியும் சிறிலங்கா அரசுடனான இரகசிய உறவுகளைதெளிவு படுத்தியும் ஓர் கையெழுத்துப் பிரதி ஈழமக்கள் மத்தியில் பரிமாறப்பட்டது. மேலும் இப்பிரதியில் புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகள் பற்றியும் இதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

□ இரண்டு ஹெலி இல்லிருந்து புத்தூர், வாதரவத்தை போன்ற பகுதிகளில் குண்டு வீசப்பட்டன. புத்தூர் சிறிவிக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் மீதும் 'ஹெலி'இல் இருந்து சுட்டத்தில் சரஸ்வதி (50), ஜெயரூபன் (12) ஜெயகரன் (8) ஆகியோர் ஸ்தலத்தில் மாண்டனர். மேலும் இதே தினம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்கள் மீது ஹெலியில் இருந்து குண்டுகள் பொழியப்பட்டன.

□ இதே வேளை மட்டக்களப்பிலிருந்து யாழ் நோக்கி வந்த பயணிகள் பஸ் புனாணை என்ற இடத்திலமைந்த இராணுவ முகாமில் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. இதில் தம்பிராசா, யோகராசா, நடராசா, பூபாலப்பிள்ளை ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

□ வசா விளானிலிருந்து 2 கிலோ மிட்டர் தூரத்தில் உள்ள தோலகட்டியில் 2 கத்தோலிக்க மதகுருமார்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டனர்.

***மார்ச் 6***

இன்று முழுவதும் 2 ஹெலி நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள குடியிருப்புக்கள் மீது குண்டுமாரி பொழிந்தன. இதில் செல்வகுமார் (9) சுதாகரன் (6) என்ற சிறுவர்கள் பலத்த காயமடைந்தனர். 5இற்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன. மேலும் கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவம் 5 மக்கள் குடியிருப்புக்களை குண்டு வைத்து தகர்த்தனர்.

***மார்ச் 7***

நல்லூர், கந்தர்மடம் போன்ற இடங்களில் உள்ள போராளிகளின் முகாம்கள் மீது காலை 6-15 இற்கு 3 பொம்பர்கள் குண்டுகளை வீசின இதில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு வதைமுகாமில் இருந்த புளொட் போராளி மரணமானார். இதேபோல் இவர்களின் வதை முகாமில் இருந்த 6 ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்கள் தம்மை பாதுகாத்துக்கொண்டு தப்பித்தனர். தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானது. வேவு பார்க்கும் வேலையில் 2 ஹெலி ஈடுபட்டன.

□ நாவற்குழி இராணுவ முகாம் பகுதியில் இன்று தொடர்ச்சியாக இரண்டாவது கிழமையாக குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதில் 2 புலிகள் மாண்டனர். இன்று இரவு யாழ்கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் யாழ்ப்பாணம் பள்ளிவாசலில் வீழ்ந்ததினால் பள்ளிவாசல் பலத்த தேசத்திற்குள்ளானது. அமீன் (26) செய்யது (22) ஆகியோர் மாண்டனர். யாழ் அரசினர் வைத்திய சாலை மீது விழுந்த ஷெல்களினால் அவசர சிகிச்சைப்பகுதி, வெளி நோயாளர் பகுதி, வைத்திய அதிகாரிகளின் ஓய்விடம் வி. டி கிளினிக் தண்ணீர்த் தாங்கி ஆகியவற்றிற்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இதில் ஆஸ்பத்திரி நலத்துறை அதிகாரி,ல் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் ஸ்தலத்தி மாண்டனர். 14 இற்கு மேற்பட்ட நர்சுகள், டாக்டர்கள் பலத்த காயத்திற்குள்ளானார்கள். உலுக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலால் 11 சிங்களப் பொதுமக்கள் 9 இராணுவத்தினர் ஸ்தலத்தில் மாண்டனர்.

□ கோட்டையிலிருந்து இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்ட பொழுது மோட்டார் குண்டுக்கு (செல்) முஸ்லிம் வீதியைச் சேர்ந்த முகமது சுல்தான் (வயது 19) கொட்டடியை சேர்ந்த பேராளசிங்கம் ஆகிய இருவர் பலியானார்கள்.

***மார்ச் 8***

நாவற்குழி இராணுவ முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கையாக முகாமிற்கு அண்மையில் உள்ள அன்ரூஸ் இறால் பதனிடும் ஆலையினுள் புகுந்த இராணுவத்தினர் அங்கு தொழில் செய்யும் 150 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை பயணக்கைதிகளாக முன் வைத்து முன்னேற முயன்றனர். பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தும்பளை, கலட்டி வறாத்துப்பளை போன்ற மக்கள் நெருக்கமாக குடியிருக்கும் பகுதிகள் மீது வீழ்ந்ததினால் பல பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

□ 8-3-1987 அன்று காலே 11 மணியளவில் நாவற்குழி அன்ரூஸ் தொழிற்சாலேக்கு நாவர்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் திடீரெனச் சென்று தொழிற்சாலேயில் இருந்த ஆண் ஊழியர்களே வெளியேறுமாறு பணித்தனர். பின்னர் இராணுவத்தினர் தங்கள் பாதுகாப்பிற்காக தொழிற்சாலேயில் உள்ள 72 பெண் ஊழியர்களேயும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயணக் கைதிகளாக வைத்திருந்து பின்னர் பிற்பகல் 4.40 மணிக்கு விடுதலை செய்தனர்.

☐ மட்டக்களப்பு கரடியினாறு பகுதியில் போராளியொருவரைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்ற பாதுகாப்புப் படையினரை போராளிகள் வழிமறித்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அப்போராளியை மீட்டனர்.

***மார்ச் 9***

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இன்று அயலிலிருக்கும் கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கடந்த சிலதினங்களாக யாழ்கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் சேதமடைந்த சொத்து விபரம் 10 கோடி எனவும் உயிர்ச்சேதம் பல எனவும் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு யாழ் வர்த்தக சங்கம் கொண்டு வந்துள்ளது.

☐ ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்க அனைத்து தேசபக்த சக்திகளும் ஒன்று படுக! தோழர் பத்மநாபா அறைகூவல்!

மட்டு நகர்ப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் யார்குடாநாட்டில் அத்தாக்குதல்கள் தொடர்ந்து சொண்டேருக்கும் காலகட்டத்தில் **அனைத்து தேசபக்த சக்திகளும் அணிதிரண்டு தமது வரலாற்று கடமையை நிறைவு செய்யவேண்டும் என்று தோழர் கே. பத்மநாபா அறைகூவல் விடுத்துள்ளார்.**

உலக அபிப்பிராயம் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைளுக்கு தயவுதாட்சண்ணியமற்ற கண்டனமாக இருக்கையில் உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவி தனது நவபாசிச நடவடிக்கைகளை ஈழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இக்கட்டத்தில் இந்தியாவும் ஏனைய உலகின் முற்போக்கு ஜனநாயக அரங்கும் உறுதியான ஆதரவை எமக்குத் தரவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

☐ 09.03.1987 அன்று மாலை நாவற்குழியில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலினால் இருபாலை மடத்தடியில் 30 வீட்டுதிட்டப்பகுதியில் குட்டுணி பகுதியிலும் வெடித்துச் சிதறியதால் அங்குள்ள மக்கள் மயிரிழையில் உயிர்த்தப்பினர்.

***மார்ச் 10***

இன்றும் நாவற்குழி முகாமிலிருந்து குடியிருப்புக்கள் மீது ஷெல் பல ஏவப்பட்டன. இராணுவத்தினர் இம்முகாமிலிருந்து குண்டு துளைக்காத உடைக்ளை அணிந்து கொண்டு கைதடி நோக்கி முன்னேறினர். நீர்வேலிப்பகுதியில் $1\frac{1}{2}$ மணி நேரமாக நடைபெற்ற ஷெல் தாக்குதல்களால் திருமதி. தங்கரத்தினம் என்ற கோவில் ஊழியர் மாண்டார். தமிழ்ப் பயணிகளின் உடைமைகள் வவுனியா திருமலை வீதியில் உள்ள ஹொறவப்பொத்தானையில் சூறையாடப்பட்டன.

☐ 10.03.1987 அன்று காலை பருத்தித்துறைப் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கி தாக்குதலை தொடர்ந்து காலை 6 மணிமுதல் 7மணி வரை பயங்கரமான மோட்டார் குண்டுத் தாக்குதல் (செல்) மக்கள் அதிகம் செறிவாக வாழும் தும்பளை, கலட்டி, வராத்துப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் பாக்கியம் ஐயாத்துறை (வயது 65) படுகாயமடைந்தார்.

***மார்ச் 11***

அனுராதபுரம் இராணுவ முகாமிலிருந்து சாலைபுரம் இராணுவ முகாம் நோக்கி சென்ற இராணுவ வாகனம் ஈழப்போராளிகளின் கண்ணிவெடியில் சிக்கியதில் 7 இராணுவத்தினர் ஸ்தலத்தில் மாண்டனர். மற்றும் 20 இராணுவத்தினர் பலத்த காயத்திற்குள்ளானார்கள், காங்கேசன் துறை துறைமுகத்தில் இன்று கப்பல்மூலம் பெருந்தொகையான நவீன இராணுவத் தளவாடங்கள் இறக்கப்பட்டன. தொடர்ந்து இன்றும் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து ஷெல்கள் ஏவப்பட்டதில் ஜோசப்பீன் என்ற பெண்மணி பலத்த காயத்திற்குள்ளானார்.

***மார்ச் 13***

தள்ளாடி இராணுவ முகாமில் விமான ஓடுபாதை இன்று அத்துலக் முதலியினால் திறந்துவைக்கப்பட்டது. வசாவிளான் இராணுவ முகாம் இன்று மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இதனால் தமது வீடுகளை இழந்த 175 குடும்பங்கள் அகதிகளாக அயல்கிராமங்களில் தஞ்சமடைந்தனர். இஸ்ரேலிய மொசாட் உறுப்பினர் பலர் பலாலி இராணுவ முகாமில் வந்திறங்கினர்.

***மார்ச் 14***

காங்கேசன் துறையிலிருந்து பலாலி நோக்கி இராணுவம் நடைபவணியாக செல்லும்போது பொதுமக்கள் மீது இராணுவம் சுட்டதில் கந்தையா (53) ஸ்தலத்தில் மாண்டார். மேனகா(32) சிவகுமார் (18), ரகுநாதன் (43) ஆகியோர் உட்பட பலர் படுகாயமடைந்தனர். 500கும் மேற்பட்ட இராணுவத்தினர் கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு புதிதாக கொண்டுவரப்பட்டனர். கொழும்பில் வெள்ளவத்தை, கொட்டான்சேனை பம்பலப் பிட்டி போன்ற தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுத்யை சுற்றி வளைத்த பொலிஸார் பல இளைஞர்களை கைதுசெய்து கொண்டு சென்றனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மார்ச் 15**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் பொலிட் பீரோ உறுப்பினருமான பொன் குமாரசுவாமி கொழும்பில் மாரடைப்பினால் மரணமானார். இவர் இலங்கை தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் மயப்படுத்துவதில் பெரும்பங்கு வகித்தவர். ஈழவிடுதலை இயக்கங்கள் பற்றிய மதிப்பீட்டில் தனது திசை வழியை சரியான வகையில் மேற்கொண்டவர். இனங்களுக்கிடையான புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதில் கணிசமான பங்குகளை வகித்த இவர் தனது கட்சியினூடாக சிங்களமக்கள் மத்தியில் ஈழத்தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை எடுத்துச்செல்வதில் கடுமையாக உழைத்தவர். இவரின் மறைவு ஈழவிடுதலைப் போராட்டத்திற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் பெரிய இழப்பாகும். இவரின் மறைவு குறிதது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அஞ்சலியை செலுத்தியது.

☐ நாவற்குழி இராணுவமுகாமிலிருந்து தொடர்ந்து இன்றும் குடிமனைகள் நோக்கி ஷெல் ஏவப்பட்டது. யாழ்குடா நாட்டிற்கு 4 கப்பல்களில் சீறிலங்கா இராணுவம் வந்தது. இதில் 2 கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்திலும், ஏனைய 2ம் காரைநகர் கடற்படை முகாமிற்கும் சென்று துருப்புக்களை இறக்கின. அம்பாறையில் இராணுவ வாகனமொனறு தடம்புறண்டதில் 3 பேர் ஸ்வத்தில் மாண்டனர்; 4 பேர் படுகாய முற்றனர்.

☐ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 13வது காங்கிரஸ் கொழும்பில் தோழர் பீட்டர் கெனமனின் தலைமையில் நடைபெற்றது, இவ் காங்கிரசில் இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாகவும், ஈழவிடுதலை இயங்கங்கள் பற்றிய விடயங்களும் முக்கியமாக கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டது. இக்காங்கிரசில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் சிறப்பு பிரதிநிதியாக தோழர் மாணிக்கம் கலந்து கொண்டார்.

**மார்ச் 16**

நாவற்குழி, தெல்லிப்பளை போன்ற இடங்களில் 'ஹெலி' பொதுமக்கள் மீது குண்டுகளை பொழிந்தன. இதில் பல பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். கிளி நொச்சி தேவிபுரம், சுதந்திரபுரம் போன்ற இடங்களில் 3 பொம்பர்கள் குண்களை வீசின.

**மார்ச் 17**

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல்கள் ஏவப்பட்டன. இதில் அற்புதன் (26) வின்டன் (18) ஆகியோர் மாண்டனர். உதயகுமார் (26), பாலகிருஷ்ணன் (19; பத்மநாதன் (37) சந்திரமோகன் (20) ஆகியோர் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.

**மார்ச் 18**

நாவற்குழி இராணுவமுகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் S.இராமலிங்கம் (69) காயமடைந்தார். இச்சம்பவத்தில் புலிகள் உறுப்பினர் கேதிஸ் என்பவர் மரணமடைந்தார், கண்டி கலஹா பிரிவைச் சேர்ந்த தேயிலைத் தொழிற்சாலை ஒன்று இனம் தெரியாத நபாகளால் தீமூட்டி எரிக்கப்பட்டது,

**மார்ச் 19**

இன்று பிற்பகல் மன்னாரிலுள்ள முருங்கன் என்னும் இடத்திற்கருகில் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற தனியார் பஸ் ஒன்றிற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் செல்வலிங்கம் (வயது 50) என்ற பயணி சுட்டுக்கொல்லப்பட்டார். ஏனைய பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

☐ நாவற்குழி இராணுவமுகாமில் இருந்து 20 க்கு மேற்பட்ட செல்கள் சுற்றியுள்ள குடியிருப்புக்களை நோக்கி வீசப்பட்டது. பலகுடியிருப்புகள் பலத்த சேதத்துக்கு உள்ளானது பயணிகள் வாகனம் ஒன்றின் மீது முருங்கன் இராணுவம்காம் இராணுவத்தினர் சட்டதில் என். செல்வலிங்கம் (அடம்பன்) பரமநாதன் ஆகியோர் கொல்லப்பட்டனர் மேலும் பல பொதுமக்கள் பலத்த காயத்துக்குள்ளாக்கப்பட்டனர்,

☐ மூதூர் இரானுவமுகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில மூவர் கொல்லப்பட்டனர், அருகில் உள்ள குடியிருப்புக்கள் வீடுகள் இராணுவத்தால் தரைமட்டமாக்கப்பட்டன. மட்டக்களப்பில, புலிபாய்ந்த கல் என்ற இடத்தில் புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டது —நெடுந்தீவில் இருந்து யாழ்பாணம் நோக்கி வந்த பயணிகள் படகில் வந்த நான்கு ஆசிரியர்கள் ஸ்ரீலங்கா கடறபடையினர் கைது செய்தனர்.

**மார்ச் 20**

கடந்த இரண்டு கிழமைகளாக நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட செல் துப்பாக்கித் தாக்குதல்களால், மணியன் தோட்டம், செம்மணி கைதடி போன்ற அயல் கிராமங்களில் இருந்த மக்கள் தமது குடியிருப்பில் இருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றுள்ளனர்.

☐ கொக்கட்டிச் சோலையில் 3 புதிய இராணுவ முகாம்கள் மகிழடி தீவு, மணல்பிட்டி, அம்பலாம்தடி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அத்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கரைப்பற்று, வேலமரம் போன்ற இடங்களில் விசேட அதிரடிப்படை வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தியதில் பலர் காயமடைந்தனர். உழவு யந்திரங்கள் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டன.

**மார்ச் 21**

EROSசைச் சேர்ந்த, பரா, சாந்தன் என்பவர்கள் தேவி புரத்துக்கு அருகில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். நாவற்குழி முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதலால் கோப்பாய் கைதடி வீதியில் லொறியில் சென்று கொண்டிருந்த லொறிடிரைவர் சுப்பையா, மற்றும் அதில் பயணம் செய்த இருவர் காயத்துக்குள்ளானவர்கள், மேலும் வீதியில் சென்ற பாதசாரிகளான N. பொன்னர் (59) சுப்பிரமணியம் (36) பூபாலசிங்கம் (30) ஜெகதீஸ்வரன் (26) போன்றோர் உட்பட பலர் பலத்தகாயத்துக்கு உள்ளானார்கள்.

மன்னார் தள்ளாடி இராணு முகாமில் ஸ்ரீலங்காவின் யுத்த விமானங்கள் ஏறி இறங்குவதற்காக ஓடு பாதை தளம் அமைப்பு வேலைகள் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இதனிடையே 21-03-87 அன்று காலை அடிக்கடி குண்டுவெடிப்புச் சத்தங்கள் இம்முகாமிலிருந்து தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

**மார்ச் 22**

எரிபொருள் தடை, உணவுத் தடையைக் கண்டித்தும் உடனடியான நீக்குமாறும் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யாழ் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து யாழ் கச்சேரியில் பொதுக்கூட்டத்துடன் முடிவுற்றது. இதில். ஈழ மாணவர்கள் ஈழ விவசாயிகள், ஈழ உழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலான பகுதியினர் பெண்களாகவே காணப்பட்டனர். நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள கோப்பாய் நிர்வேலி, கைதடிப் பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு மாரி பொழிந்தன. இதனால் W. A. D. பற்றிக் என்ற சிங்கள லொறிச் சாரதி பலத்த காயத்துக்கு உள்ளானார்.

**மார்ச் 23**

பண்ணைப் பொலிஸ் விடுதி—மினிமுகாம், புலிகளால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் போலீசார் சிலர் கொல்லப்பட்டனர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளில் 4பேர் கொல்லப்பட்டனர் 10 பேர் படுகாயத்துக்குள்ளாக்கப் பட்டனர்.

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட செல், யாழ் ஆஸ்பத்திரி 19 நம்பர் வாட்டில் விழுந்து வெடித்ததால் கட்டடம் பலத்த சேதத்துக்குள்ளாக்கப் பட்டது ஊழியர்களும் பலத்த காயத்துக்குள்ளாக்கப்பட்டனர்.

**மார்ச் 24**

சங்குப்பிட்டி இறங்கு துறையில் பஸ்ஸிற்காக் காத்திருந்த பயணிகள் மீது பூநகரியில் இருந்து வந்த ஹெலிகொப்டர் சூட்டதில் 15 பேர் படுகாயமுற்றனர்.

**மார்ச் 25**

தொண்டை மனாறு இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறை, இடைக்காடு போன்ற இடங்களுக்கு செல் தாக்குதல் நடைபெற்றது இதில் பல பொதுமக்கள் காயமுற்றனர்.

நீர்வேலி, கைதடி, அரியாலை, கோப்பாய் போன்ற இடங்களில் இராணுவத்தினர் கெலியில் இருந்து சுட்டதில் பல பொதுமக்கள் படுகாயமுற்றனர்.

**மார்ச் 26**

☐ ஈழப் போராட்டத்தை இந்திய அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரி நாச்சிமார் கோவிலில் இருந்து யாழ் கச்சேரி வரையிலான ஓர் ஊர்வலம் ஈழ மக்களால், நடத்தப் பட்டது.

☐ காங்கேசந்துறை, ஹாபர் வியூ ஹோட்டலின் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள், சங்குவேலி, கந்தரோடை, அளவெட்டி போன்ற குடியிருப்புகள் மீது பாரிய சேதத்தை ஏற்படுத்தியது. இதில் 7 வயது சிறுவன் இளைய தம்பி கொல்லப்பட்டார் இராசையா (64) சகுந்தலா தேவி (19) இராசர் (50) போன்றவர்கள் படுகாயத்துக்கு உள்ளானார்கள்.

☐ பலாலி, வசா விளான் முகாமில் இருந்து இராணுவத்தால் ஏவப்பட்ட ஷெல்களால் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட மொத்தம் 10 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 12 பேர் படுகாயமுற்றனர் மனோ என்ற புலி உறுப்பினரும் கொல்லப்பட்டார்.

☐ யாழ் புராணம் பஸ் டிப்போவுக்கு எனக்கொண்டு வரப்பட்ட 11 பீப்பா எரிபொருள் ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டது.

அடம்பனிலிருந்து உயிலங்குளம் நோக்கி சேர்ந்து சென்ற அரசு இராணுவத்தினர் பொது மக்களை நோக்கி சுட்டார்கள். முருகானந்தன் (47) சிவலிங்கம் (42) கணேசலிங்கம் (48) ஆகிய மூன்று விவசாயிகள் ஸ்தலத்தில் மாண்டனர்.

**மார்ச் 27**

காங்கேசன் துறை ஹாபர் வியூ ஹொட்டல் முகாம் நாவற்குழி முகாம், யாழ் கோட்டை முகாம் போன்றவற்றில் இருந்து அம்முகாம்களை சுற்றியுள்ள பிரதேசங்களை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டது. பல பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். இதல் பல குடியிருப்புகள் பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டன.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மார்ச் 28**

யாழ் கோட்டை முகாமில் இருந்த ஏவப்பட்ட ஷெல் குடியிருப்புகள் மீது விழுந்ததினாலும் ஹெலியில் இருந்து சுட்டதினாலும் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 25 இற்கு மேற்பட்ட பொது மக்கள் படுகாயத்திற்குள்ளானார்கள். நாவாந்துறை நிக்கலஸ் சேர்ச் பலத்த சேதத்திற்குள்ளானது. பிரசித்தி பெற்ற மாவட்டபுரம் கந்தசுவாமி கோவில் மீது பலாபி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட 25 இற்கு மேற்பட்ட ஷெல் தாக்கியதில் கோவில் பலத்த சேதத்திற்குள்ளானது.

வட மராட்சியில் பருத்தித்துறை, புலோலி, தம்ப செட்டி போன்ற இடங்களில் ஹெலி தாக்குதல் மேற்கொண்டது. பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. இதே வேளை தொண்டமனாறு முகாமில் இருந்து அருகில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. பல வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானது. பல பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

**மார்ச் 29**

யாழ்ப்பாணம் மாநகர சபை கடந்த காலங்களில் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 1000/ரூபா வீதம் உதவி வழங்குவது என்று தீர்மானித்துள்ளது. இன்று இரண்டாவது நாளாக யாழ் நகரில் உள்ள நல்லூர் நீர்வேலி போன்ற இடங்களில் 50 இற்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. இதில் பாடசாலை, நூலகம், ஆலயம், 35 இற்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானது. யாழ் கோட்டை முகாமில் இருந்த ஏவப்பட்ட ஷெல்கள் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது பலத்த சேதத்தை விளைவித்தன. இதில் 6-இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பலத்த காயத்திற்குள்ளானார்கள்.

**மார்ச் 30**

யாழ் அரசினர் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டித்து யாழ் வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள், மௌன ஊர்வலம் நடத்தினர். 500 இற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் காலி, மாத்திரை, அம்பான் தோட்டை போன்ற பகுதிகளில் அரசுக்கு எதிராக செயல்பட்டனர் எனக்கூறி கைது செய்யப்பட்டனர்.

தனது காதலியை சந்தித்துவிட்டு முகாமுக்கு திரும்புகையில் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இரவு 9 மணியளவில் புலிகளின் யாழ்ப்பாணப் பகுதி தளபதி கிட்டு இனம் தெரியாதோர் வீசிய கைக்குண்டொன்றினால் தாக்குதலுக்குள்ளானார். கிட்டுவின் இருமெய் காப்பாளர்களும் ஸ்தலத்தில் மாண்டனர். கிட்டு பலத்த காயத்திற்குள்ளானார். பின்பு சிகிச்சையின் போது இவரின இடது கால் முற்று முழுதாக அகற்றப்பட்டது. இக்கொலை முயற்சிக்கான சூத்திரதாரி புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் என்றும் இதனை இவர் புலிகளின் வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் மாத்தயாசிறி குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. என யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன. கிட்டுவிற்கும் பிரபாகரன் மாத்தயாசிறி போன்றோர் இடையே கடந்த 2 வருடகாலமாக நிலவி வந்த அதிகாரப்போட்டியே இக்கொலை முயற்சிக்கான காரணம் என்றும் யாழ் மக்கள் பேசிக் கொள்கின்றனர். இவ்வுண்மை நிலையிலிருந்து மக்களை திசைதிருப்பி உண்மைகளை மறைப்பதற்கான முயற்சிகளை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கிட்டுவின் கொலை முயற்சியின் 1 மணிநேரம் பின்பு இரவு 10 மணியளவில் புலிகளின் யாழ் பகுதி இராணுவ பொறுப்பாளர் அருணா தலைமையிலான குழு ஒன்று நல்லூர் கந்தன் கருணையில் உள்ள புலிகளால் நடத்தப்படும் சித்திரவதை முகாம் ஒன்றினுள் புகுந்து அங்கு இருந்தவர்கள் மீது சகட்டு மேனிக்குச் சுட்டு தமது கொலை வெறியைத் தீர்த்துக்கொண்டனர். இதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 18இற்கு மேற்பட்ட தோழர்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்பு புலிகளின் அருணா குழுவினர் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள புலிகளின் மற்றொரு வதை முகாமிற்கு சென்று அங்குள்ள ஈழப் போராளிகள், பொதுமக்கள் மீது சரமாரியாகச் சுட்டனர். இதே போல் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள புலிகளின் மற்றுமொரு வதை முகாமில் தமது கொலை வெறியைத் தீர்த்தனர். இவற்றால் மொத்தம் 54 இற்கும் மேற்பட்ட புளொட், டெலோ, ஈ. பி. ஆர். எல். எப். தோழர்கள், பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் பணம் வாங்கும் நோக்குடன் புலிகளால் கடத்தி வரப்பட்டு வள முகாமில் அடைக்கப்பட்டிருந்த நியூ லலிதா ஆபரண மாளிகை உரிமையாளரும் கொல்லப்பட்டார்.

**மார்ச் 31**

போராளிகள் மீதான கோழைத்தனமான தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை நடவடிக்கைகளால் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணித் தோழர்களான தோழர் கபூர், தோழர் மஜித், தோழர் அன்பரசன் தோழர் பெஞ்சமின் தோழர் ஈஸ்வரன், தோழர் தாசன், தோழர் பவான் போன்றோர் படுகொலை செய்யப்பட்டனர். பாசிஸ்ட்டுகளால் கொலை செய்யப்பட்ட இத் தோழர்களுக்கு ஈழமககள் தமது வீர அஞ்சலியைச் செலுத்தி சுவரொட்டிகள் ஒட்டினர். ஈழமக்கள் புரட்சிகர வடுதலை முன்னணியினரும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

புலிகளின் முகாம் ஒன்றில் காவலில் உள்ள ஈ. பி. ஆர். எல். எப. உறுப்பினர்கள் துப்பாக்கியூப்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பறித்து புலிகளை நோக்கி சுட்டதில் கிட்டுவின் மெய்க்காப்பாளர்கள் இருவர் மரணம். தப்பியோட முயன்ற ஈபிஆர்எல்எப் இனர் மீது தாம் நடத்திய துப்பாக்கி சூட்டில் 18 பேர் மரணம் என்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைச் செய்தி யொன்று குறிப்பிடுகின்றது. ஆனால் மக்கள் உண்மையை அறிவர்.

கிட்டு மீதான கொலை முயற்சியின் எதிரொலியாக ஈபிஆர்எல்எப், டெலோ, புளொட் இயக்கங்களை சேர்ந்தவர்கள் உட்பட 350 இற்கு மேற்பட்ட ஈழமக்கள் புலிகளினால் கைது சிறிலங்கா இராணுவத்தினர் போல் புலிகள் செயல்பட்டனர். ஈழப்போராளிகள் பலரின் வீடுகள் புலிகளினால் ஒரு நடுநிசியில் சோதனை இடப்பட்டது. அடித்து நொறுக்கப்பட்டது. ஈழப் போராளிகளின் தாய் தகப்பன் சகோதரர்கள் புலிகளால் துன்புறுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்டு புலிகளின் வதை முகாமிற்கு இழுத்து செல்லப்பட்டனர்.

டெலோவின் ஆதரவாளர்கள் பலர் கல்வியங்காடு கட்டைப்பிராய் பகுதியில் புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் வதை முகாமிற்கு இழுத்துச் செல்லப்பட்டனர். 20இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வதை முகாம்களில் சித்திரவதையின் பின்பு கொல்லப்பட்டனர் டெலோவின் ஆதரவான பெண் மணி ஒருத்தியை (இவருக்கு வயது 45) எல். டி. டி. ஈ. இல் உள்ள பெண் புலிகள் கடத்திச் சென்று விசாரணை என்ற பெயரால் சித்திரவதை செய்தனர். டெலோவின் தலைவர் சிறீசபாரத்தினத்தின் சகோதரி புலிகளால் சித்திரவதைக்குப்பின்பு கொல்லப்பட்டார்.

***ஏப்ரல் 1***

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பகுதிகளில் புலிகள் பொதுமக்கள், ஈழப் போராளிகள் மீது தாக்குதல் நடாத்தினர். சோதனை இடல் என்ற பெயரில் வீடுகளில் புகுந்து அடாவடித்தனம் புரிந்தனர். பல ஈழப் போராளிகளை விசாரணை என்ற பெயரில் கைது செய்து சித்திரவதை செய்கின்றனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரின் சகோதரர் புலிகளால் இழுத்துச் செல்லப்பட்டு நகங்கள் பிடுங்கப்பட்டு, கண்களைத் தோண்டி சித்திரவதை செய்தனர் பின்பு உடலைப் பல கூறுகலாக வெட்டி வீதியில் வீசினர்.

***ஏப்ரல் 5***

மட்டுநகர் செயின்ட்-மேரிஸ் ஆலயத்தில் மட்டக்களப்பிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள், பொதுமக்களால் ஒரு உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. வெலிக்கடையில் தமது அடிப்படை உரிமைகளை கோரி உண்ணாவிரதம் நடத்தும் சிறையிலுள்ள போராளிகளுக்கு ஆதரவாக இது நடத்தப்பட்டது. இச்சிறைக் கைதிகளுக்கு சாதகமான பதிலை 25-04-87 இற்கு முன் தரும்படி மட்டுநகர் பிரஜைகள் குழு ஜே-ஆர் ஐ கோரியது. இதற்கிடையில் இன்று மட்டுநகரில் படுவான் கரையிலும், கொக்கட்டிச் சோலையிலும் 'பொம்பர்' விமானங்களினால் குண்டுகள் போடப்பட்டன. இதில் பல அப்பாவி பொதுமக்கள் இறந்தனர். மேலும் அதே தினம் மட்டுநகர் பாலையடி வெட்டையிலும், சாகாமத்திலும் கண்ணிவெடி வைக்கப்பட்டது. இதில் பாலையடி வெட்டையில் இரு பொலிசார் மாண்டனர்.

☐ சிறிலங்காவில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விசாரணையோ விடுதலையோ இன்றி நீண்டகாலம் சித்திரவதைக்குள்ளாவதற்கு எதிராக வெலிக்கடை, பூசா சிறைச் சாலைகளில் தமிழ் கைதிகள்

T. A. ராஜ்மோகன்
S. சந்திரலிங்கம்
P. சிறிதரன்
G. A. பிலிக்ஸ்
T. கிருபாகரன்

என்பவர்கள் இன்றுதொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். தமது உண்ணாவிரதத்திற்கான காரணத்தை விளக்கி இவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு அறிவித்துள்ளனர், மேலும் ஈழத்தில் உள்ள பிரஜைகள் குழுவிற்கும் சிறிலங்கா அரசின் ஜே. ஆர் இற்கு பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலக் முதலிக்கும் அறிவித்துள்ளனர்.

***ஏப்ரல் 7***

தமக்குள் பெருகிவரும் பதவிப் போட்டிகளினால் ஏற்பட்ட உள் முரண்பாடுகளால் பிரபாகரனின் திட்டப்படி மாத்தயாசிறினால் மேற்கொள்ளப்பட்ட கிட்டு மீதான கொலை முயற்சியை மூடி மறைக்கும் நோக்குடன் அன்ரன் பாலசிங்கம் சென்னையில் விடுத்த அறிக்கையை மறுத்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது, எமது தோழர்களோ, ஏனைய இயக்கப் போராளிகளோ புலிகளின் வதை முகாம்களில் இருந்து தப்பியோட முயற்சிக்கவில்லை. மாறாக புலிகள் தான வதைமுகாமிற்குள் புகுந்து சகட்டுமேனிக்கு சுட்டனர். இப்படுகொலைகள் 1984 ஆண்டு வவுனியாவில் உள்ள ஈழப்பெரிய குளத்தில் அமைந்த சிறிலங்கா அரசின் வதைமுகாமில் நடைபெற்ற 20இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் கொலைக்கு எவ்விதத்திலும் மாறுபட்டதல்ல.

மேலும் அவ்வறிக்கையில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் இனப்படுகொலைகளுக்கு ஒத்த மாதிரியே இப்படுகொலைகளும் நடைபெற்றுள்ளன. கிட்டுவை கொலை செய்ய முயற்சித்தவர்களைக் கைதுசெய்தல் என்ற போர்வையில் கடந்த சில தினங்களாக 300 இற்கும் மேற்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஏனைய இயக்கப் போராளிகள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரவாளர்களை புலிகள் கைது செய்து தமது வதைமுகாம்களில் அடைத்துள்ளனர். புலிகளின் இவ்வன்முறைகளை எதிர்த்து இந்தியாவில் உள்ள சகல ஜனநாயக முற்போக்கு சக்திகள் போராட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் மீதான இராணுவத்தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்த சிறிலங்கா அரசு தொடர்ந்தும் ஈழப் பிரதேசம் முழுவதும் தனது இராணுவ நடவடிக்கையை உக்கிரமாக மேற்கொண்டு வருகின்றது. மேலும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு வந்தால் ஒழிய பயங்கரவாதிகளுடன் பேசத்தயார் இல்லை என்று ஜே. ஆர். கொக்கரித்துள்ளான்.

மட்டக்களப்பு பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் சார்பாக மட்டக்களப்பில் உள்ள பல்வேறு அமைப்புக்கள் சிறையில் நடைபெறும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். இதில் பெருந் தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர். சிறைக் கைதிகளின் கோரிக்கைகளுக்கான பதிலை ஏப்ரல் 25க்கு முன்பு தரப்பட வேண்டுமென்று கோரி ஜே. ஆர். இற்கு மட்டக்களப்பு பிரஜைகள் குழு மனு ஒன்றை அனுப்பி வைத்தது.

**ஏப்ரல் 10**

சிறிலங்கா சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் நடத்தும் சாகும்வரை உண்ணாவிரதப் போருக்கு ஆதரவாகவும் உரமூட்டும் நோக்கிலும் இலங்கை மனித உரிமைகள் பாதுகாப்பு ஒன்றியம் இன்று தொடக்கம் அடையாள உண்ணாவிரதமும், தொடர் உண்ணாவிரதங்களும் சென்னை மெரினா கடற்கரையில் நடாத்துகின்றது. இதில் EPRLF PLOT, TELO, போன்ற விடுதலை ஸ்தாபனங்களும் இந்தியாவில் உள்ள பல்வேறு ஸ்தாபனங்களும் இணைந்து பங்குபற்றுகின்றன.

இப்போராட்டம் சம்பந்தமாக இலங்கை பாதுகாப்பு ஒன்றியம் துண்டு பிரசுரம் ஒன்றையும் சுவரொட்டி ஒன்றையும் வெளியிட்டது. கைதிகள் பற்றி சிறிலங்கா அரசின் நிலைபாடு பற்றி தெளிவுபடுத்த இவ்வொன்றியத்தின் செயலாளர் தோழர் நடேசன் தலைமையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடத்தப்பட்டது கைதிகளின் போராட்டம் பற்றி இவ்வொன்றியம் இந்திய அரசாங்கத்திற்கும் கடிதம் ஒன்று அனுப்பி வைத்தது.

**ஏப்ரல் 13**

இலங்கை மனித உரிமை ஒன்றியத்தினால் சென்னை மெரினா கடற்கரையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறைக் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக நடத்தும் உண்ணாவிரதம் இன்று 2-ம் நாள். இன்று ஜனதா தலைவர் செழியன் அவர்களால் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் அவர் உரையாற்றும் போது ஈழ மண் இரத்தத்தினால் செம்மையாகப் போகின்றது என்று குறிப்பிட்டார். மேற்படி ஒன்றியத்தின் செயலாளர் டாக்டர் நடேசனால் சிறிலங்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மனு ஒன்றில்.

□ 1977 முதல் இன்றுவரை 5000 ஈழ மக்களை காணவில்லை. 25000க்கு மேற்பட்டோர் சிறிலங்கா 5000க்கு இராணுவத்தினால் சொல்லப்பட்டனர்.

□ ஈழப்பிரதேசத்தில் 150 இற்கு மேற்பட்ட இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்பட்டோர் சிறையில் வாடுகின்றனர். 5000 நாடு முழுவதும் இராணுவ முகாம்களும் அகதி முகாம்களுமே உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஏப்ரல் 15**

வல்வெட்டித்துறை கடற்பகுதியிலிருந்து கடற்தொழிலாளர் மீது இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ரஞ்சித்திலகர் என்பவர் கொல்லப்பட்டார். திருமலையில் செல்வநாயக புரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 3 அப்பாவி ஈழமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மன்னார் பகுதி நாச்சிக் குடாவில் பாடசாலைக் கட்டடத்தில் 1000 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் புகுந்துகொண்டு அயலில் உள்ள குடியிருப்புக்கள் மீது குண்டுகளால் தாக்கினர். பாடசாலையின் ஒரு பகுதியையும் எரித்தனர்.

**ஏப்ரல் 18**

சிங்கள மக்கள் படுகொலைக்கு தோழர் பத்மநாப வன்மையான கண்டனம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தனது சகவிடுதலை அமைப்புக்களை அழித்ததனால் போராட்டத்தில் ஏற்பட்ட பலவீனங்களை மறைப்பதற்கு சாதாரண அப்பாவிச் சிங்கள மக்களைப் படுகொலை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கெனவே பல தடவை இத்தகைய படுகொலைகளை மேற்கொண்ட த. ஈ. வி. பு. 100க்கு மேற்பட்ட சிங்கள மக்களை திருகோணமலை கொழும்பு வீதியில் வைத்துக் கொலை செய்துள்ளனர்.

இவ்வாறான அரசியலற்ற சுத்த ராணுவ வதை வெறிச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ஏப்ரல் 20**

திருகோணமலைப் பகுதியில் உள்ள சிங்களக் கிராமமொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கியதில் 15 அப்பாவிச் சிங்கள மக்கள் சொல்லப் பட்டனர். இதே தினம் இங்கு இராணுவம் சுட்டதில் 5 பெண்கள் உட்பட 1 சிறுவன், 1 சிறுமி, கொல்லப்பட்டனர் நிலா வெளியில் உள்ள அகதிகள் முகாமில் இராணுவம் சுட்டதில் 10 தமிழ் அகதிகள் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தினிய தேசிய சபைக் கூட்டம் அல்ஜிர் இல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பாலஸ்தீன மக்களின் விடுதலையுடன் தம்மை இணைத்துக் கொண்ட மாணவ பெண்கள் இளைஞர் தொழிற்சங்க அமைப்புக்களிலிருந்து 340 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இச்சபைக்கூட்டத்திற்கு முன்பு பாலஸ்தீன விடுதலை அமைப்பைச் சேர்ந்த எட்டு பிரதான விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர். இக்கூட்டத்தில், முன்னர் அம்மானில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை கைவிடப் பட்டதாக தீர்மானம் எடுக்கப் பட்டது.

**ஏப்ரல் 22**

கொழும்பு கோட்டையில் கார் வெடிகுண்டொன்டொன்று பி. ப. 4-30 மணியளவில் வெடித்தது. இதில் 150 இற்கு மேற்பட்ட அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். 200 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 4 பஸ்கள், 2 கார்களில் இருந்த பயணிகள் எரிந்து இறந்தனர். புகை மண்டலத்தில் மூச்சுத் திணறி பலர் மரணமடைந்தனர்.

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தினால் புகையிலை வியாபாரி, பால் வியாபாரி மரணம், மன்னாரில் முருங்கன் மடுக்கோவில் புகையிரத தண்டவாளம் இனம் தெரியாதோரால் குண்டு வைத்த தகர்ப்பு.

□ ஈழ விடுதலைப் போராட்டத்தின் இலக்கையே திசை மாற்றுவதுடன் தமிழ், சிங்கள இனவாதிகளின் கையையே ஓங்கச் செய்துவிடும் என கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் அப்பாவி சிங்களப் பொதுமக்களின் படுகொலைகளைக் கண்டித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில் இம்மாதிரியான நடவடிக்கைகள் சிறிலங்கா அரசின் கண்மூடித்தனமான இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக அமையும் என்பதுடன் சர்வதேச ரீதியாக தனது இன ஒழிப்பு நடவடிக்கைகளை ஜே. ஆர். நியாயப்படுத்துவதற்கு இது பக்கபலமாகிவிடும் என்றும் கூறியுள்ளார் இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கும். ஊனமுற்ற மக்களுக்கும் இவர்களின் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

**ஏப்ரல் 24**

நல்லூர் கந்தசுவாமி கோவில் பொம்பர் தாக்குதலால் பலத்த சேதத்திற்குள்ளானது. நேபாம் குண்டு வீச்சால் அருகிலிருந்த பல வீடுகள் எரிந்து நாசம். யாழ் சென்பற்றிக்ஸ் பாடசாலைக் கட்டடம் பற்றிக்ஸ் புனித ஆலயம் ஷெல் தாக்குதலால் பலத்த சேதமானது. தெல்லிப்பளை, காங்கேசன் துறை, சுண்ணாகம் போன்ற பகுதிகளில் பொம்பர், ஹெலியில் இருந்து மக்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன பல பொதுமக்கள் மரணம். பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. வவுனியா இராணுவ முகாமிலிருந்து 7 இராணுவத்தினர் தப்பியோட்டம்.

**ஏப்ரல் 25**

வெலிக்கடை சிறையினுள் கலவரம் ஏற்பட்டது. இக்கலவரம் சிறை அதிகாரிகளின் தூண்டுதலால் நடைபெற்றது. பின்பு கலவரம் இராணுவத்தினரால் அடக்கப்பட்டது இதில் பல தமிழ் சிங்களக் கைதிகள் படுகாயமடைந்தனர். கலவரங்களினால் சிறைக் கைதிகளின் சாகும்வரை உண்ணா விரதம் கைவிடப்பட்டது.

**ஏப்ரல் 27**

கொழும்பு குண்டு வெடிப்பின் எதிரொலியாக 200 மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் -கொழும்பில் உள்ள தமிழ் பகுதியில் கைது.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண முயற்சிக்கும் எவரும் எமக்கு மிகப் பெரிய எதிரியாவர் என்று சிறிலங்கா பிரதமர் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி இந்தியா கருத்து தெரிவிக்கையில் இக்கூற்று ''அசாதாரணமானது'' எனக் குறிப்பிட்டுள்ளது.

இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வையே இலங்கை அரசு கையாளுகின்றது. இவ்விடயத்தை சரியாக மதிப்பிட்டு இந்தியா செயல்பட வேண்டும் மக்கள் மீதான குண்டு வீச்சுக்களை நிறுத்த உரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தோழர் மாணிக்கம் இந்திய அரசைக் கேட்டுள்ளார்.

இந்தியா-கியூபா கலாச்சார சங்கம் புது தில்லியில் கியூபா கவிஞரும் அரசியல் வித்தகரும் தேச பக்தரும் புரட்சியின் தத்துவ வித்தகருமான கோசே மாட்டி இன் 134வதுபிறந்த தினத்தைக்கொண்டாடினர். இவ்விழாவின் பிரதம விருந்தினராக இந்திய மனித வள உள்துறை அமைச்சர் திரு நரசிம்மராவ் கலந்து கொண்டார். பிரதம பேச்சாளராக ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக பேராசிரியர் திரு. டே கலந்து கொண்டார். இந்தியாவின் கியூபாத் தூதுவர் வரவேற்புரை வழங்கினார்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஏப்ரல் 28**

தமிழ் நாடு அரசு அகதிகளாக்கப்பட்ட ஈழ மக்களுக்கு உணவு உடை மற்றும் அத்தியாவசிய மருந்துத தேவைகளுக்கென ரூ 4 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. போராடும் இயக்கங்களுக்கு போதுமான ஆதரவையும் உதவியையும் வழங்குவதாகவும் அறிவித்துள்ளது. குறித்து ஈழமக்கள் சார்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமது நன்றியறிதலை தெரிவித்துள்ளது.

இது பற்றி பத்திரிகைக்கு முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா விடுத்த அறிக்கையில் மேலும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் சிறிலங்கா அரசு படைகள் தரை, கடல், ஆகாய, மார்க்கமாக மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் உச்சக்கட்டம் அடைந்துள்ளன. இவ்வேளையில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் பிரதமர் பிரேமதாசா இனப்பிரச்சனைக்கு தீர்வு காண இனிமேல் எவருடனும் பேச்சு வார்த்தை நடத்த தாம் தயாராக இல்லை எனவும் பகிரங்கமாக அறிவித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் சிறிலங்கா அரசுக்கெதிராக நடத்தும் போராட்டங்களில் முன்னின்று போராடுபவரும், மாணவர்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களில் முன்னின்று உழைப்பவருமாகிய பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவன் ரஜாகரன் (சிவராமன்) தமிழீழ விடுதலைப் புலிகளால் இன்று இரவு 6-30 மணியளவில் இனுவில் வைத்து கடத்தி செல்லப்பட்டார். பின்பு இவர் புலிகளின் முகாமில் கொடூரமான சித்திரவதைகளின் பின்பு கொல்லப்பட்டார். இக்கடத்தல் சம்பந்தமாக புலிகளிடம் பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் கேட்டபோது புலிகள் கூறினார்கள்: மாணவர்களின் போராட்டங்களில் கடந்த காலங்களில் முன்னின்று உழைத்தவர்கள் யாபேருக்கும் இக்கதியே ஏற்படும் என்று எச்சரித்தனர். இதனால் பல்கலைக் கழக மாணவர்கள் பலர், மக்களின் ஆதரவுடன் தலைமறைவாகி இருக்கின்றனர். மேற்படி பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் புலிகளால் கடத்தி கொலை செய்ததை கண்டித்து பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய போராட்டங்களில் முன்னணியில் நின்று போராடியவர்.

**ஏப்ரல் 31**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்கும் உளவுப் பிரிவுவொன்று விசேடமாக ஈழத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஈழமக்களின் விடுதலைக்காக போராடும் ஏனைய இயக்கப் போராளிகளை கொலை செய்வதற்கென இவர்கள் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இவர்கள் குறிப்பாக ஈ. பி. ஆர். எல். எப், புளொட், டெலோ போன்ற இயக்கப் போராளிகளின் வீடுகளுக்கு சென்று வீட்டில் உள்ளவர்களை விசாரணை என்ற பெயரில் மிரட்டி வருகின்றனர். கைது செய்கின்றனர். பெண்களை கைது செய்து புலிகளின் வதை முகாம்களுக்கு கொண்டு சென்று சித்திரவதை செய்வதெற்கென பெண்களால் ஆன உளவுப் பிரிவொன்றையும் பிரபாகரன் அமைத்துள்ளான்.

☐ கொழும்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் சோவியத் செய்தி நிறுவனமான நவோஸ்தி, திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா தனது தளங்களை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது. என்றும் இலங்கையில் வொய்ஸ் ஆப் அமெரிக்க நிறுவனம் தனது செயற்பாட்டை கொண்டிருப்பது பற்றி அதிருப்தி தெரிவித்துள்ளது.

**மே 1**

தமது மக்கள்விரோத பாசிச நடவடிக்கைகளால் ஈழமக்கள் மத்தியில் செல்வாக்கிழந்த மக்களின் எதிர்புக்களை எதிர்நோக்கும் புலிகள் தமக்கு மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று வெளியுலகை ஏமாற்ற மக்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி ஊர்வலங்கள் நடத்திவருகின்றது. மேதின ஊர்வலத்தை மக்கள் விரோத புலிகளின் தலைமையில் நடாத்த மக்கள் சம்மதிக்கவில்லை. எனவே தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களை துப்பாக்கி முனையில் மிரட்டி பிரபாகரன் பேசுவார் என்று நாடகமாடி வாகனங்களில் ஏற்றி நிர்ப்பந்தமான ஓர் மேதின ஊர்வலத்தை தமது கொடியின் கீழ் நடாத்தியுள்ளனர். இவர்களின் துப்பாக்கி மிரட்டல்களுக்கு பயந்து மக்கள் பதுங்கு குழிகளுக்குள் பதுங்கிக் கொண்டனர் என்று ஈழத்தில் இருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. இப்போதெல்லாம் ஈழமக்கள் பதுங்கு குழிகளை சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டுகளில் இருந்து தம்மைப்பாதுகாத்துக்கொள்ள மட்டுமல்லாமல் புலிகளிடமிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பயன் படுத்துகின்றனர்.

☐ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுவிஸ் கிளை மேதினத்தை முன்னிட்டு ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது. இதில்...'சிக்காக்கோ வீதிகள் இரத்தத்தால் சிவந்தது, இது முதலாளித் துவம் உழைக்கும் வர்க்கத்திற்கு தந்த பரிசு என்றும்... தென் ஆபிரிக்கா எல்சல்வடோர், பிலிப்பைன்ஸ், ஆஜன்ரிணா, இலங்கை இன்னும் பல நாடுகளில் முதலாளி வர்க்கத்திற்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியான போராட்டம் தொடர்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

☐ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அதன் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றமும் இந்திய கம்யுனிஸ்ட்கட்சி, இந்திய கம்யுனிஸ்ட்கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகளால் சென்னையில் நடாத்தப்பட்ட மே தின ஊர்வலத்தில்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தம்மை இணைத்துக் கொண்டன. மே தின ஊர் வலத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. அதில்... ஈழ விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் இட்டுச் செல்ல வேண்டியது ஈழத் தொழிலாளர் விவசாயிகள் கடமை என்றும் இன்றைய கால கட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள சில அபாயகரமான நிலைமைகளை நாம் தெளிவாக இனம் கண்டு பல்லாயிரக் கணக்கான மக்களினதும் போராளிகளினதும் உழைப்பாலும் தியாகத்தாலும் வளர்த்தெடுக்கப்பட்ட இப் போராட்டத்தை ஐக்கியத்தைக் குலைக்கும் சக்திகள், அராஜகவாதிகள் ஆயுத சர்வாதிகாரத்தை மக்கள் மீதும் போராளிகள் மீதும் செலுத்துவோரிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் குறிப்பிடப் பிடப்பட்டுள்ளது.

□ கடந்த சில தினங்களாக தமிழர்கள் பகுதிகள் மீது விமானம் மூலம் குண்டு வீசுவதை நிறுத்தியிருந்த சிங்கள இராணுவத்தினர் நேற்று மீண்டும் மட்டக்களப்பு பகுதியில் எரிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. இக் குண்டுவீச்சு பல மணி நேரம் நடைபெற்றது. இதில் பல பொது மக்கள் கொல்லப்பட்டனர் ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

□ நேற்றைய தினம் யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராவணுவத்தினர் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

□ நேற்றைய தினம் முல்லைத் தீவுப் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் 24 அப்பாவித்தமிழர்களை கைது செய்து முகாமுக்குக்கொண்டு சென்றனர். இவர்கள் என்ன ஆனார்கள் எள்பது தெரியவில்லை

**மே 2**

இன்று மட்டக்களப்பு படுவான்கரையில் உள்ள முனைத்தீவு என்னும் கிராமத்தை சுற்றி வளைத்த விசேட பொலிஸ் கமாண்டோக்கள் 200 ஈழ மக்களை கைது செய்தனர் பின்னர் அதில் மூவரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்னர்.

□ கொழும்பு நகருக்கு வெளியே உள்ள ஒரு பௌத்த ஆலயத்தில் பொலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

**மே 3**

யாழ் நகரில் கோப்பாய் என்னும் இடத்தில் மே தினம் ஊர்வலத்தில் சென்ற பொதுமக்கள் மீது இராணுவக் ஹெலிக்கெப்டர்கள் குண்டுகளை வீசியதில் பலர் படுகாயமடைந்தனர்.

□ மூதூரில் உள்ள பட்டித்திடல் என்னும் கிராமத்தை சுற்றி வளைத்த இராணுவத்தினர் பெண்கள் குழந்தைகள் உட்பட 19 தமிழர்களை எரியும் நெருப்பில் போட்டு படுகொலை செய்தனர்.

□ மன்னாரில் இருந்து சங்குப்பிட்டிக்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை இடைமறித்த இராணுவத்தினர் பஸ்ஸில் இருந்த இரண்டு இளைஞர்களை பயணிகள் முன்னாலேயே சுட்டுக் கொன்றனர்.

□ அதிகாலை மட்டக்களப்பு நகரத்தை சுற்றி வளைத்த பொலிஸ் கமாண்டோக்கள் 300 பேர் வரை கைது செய்து ஊறணி முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இதற்கிடையில் அம்பாறை மாவட்டத்தில் சவளக்கடை அதிரடிப்படை முகாமையும், கல்முனை பொலிஸ் நிலையத்தையும் இணைக்கும் பிரதான பாதையினூடாக மட்டக்களப்பு கடல் கீழ் ஏரிக்கு மேலாக போடப்பட்டிருந்த கிட்டங்கிப்பாலம் நேற்று இரவு போராளிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

□ இலங்கையில் 1983 ஜுலை மாதம் இனக்கலவரம் ஏற்பட்டது. அப்போது முதல் இது வரைக்கும் 5500க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் இத்தகவலை மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட ஆய்வரங்கம் ஒன்று தெரிவித்துள்ளது. வெளி நாட்டுத் தகவலை இவ்வளவு என்றால் உண்மையில் இத்தொகை இன்னும் அதிகமாகவே இருக்கும்.

**மே 4**

இலங்கையில் உள்ள தமிழ் போராளிகள் ஆயுதங்களை போட்டு விட்டு எங்களிடம் சரண் அடைந்தால் அவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. மக்களையும் போராளிகளையும் பிரிப்பதற்கான இச்சதியை ஈழ மக்கள் இனம் கண்டுள்ளனர்.

இலங்கை இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணவேண்டும் என்பதிலேயே இலங்கை அரசின் விருப்பம் இருக்குமேயானால் மிகவும் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று இந்திய வெளி விவகாரத்துறை இணை அமைச்சர் நட்வர்சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

□ கடந்த மூன்று நாட்களாக இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணம் மீது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதில் 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50 பேர் படுகாயம் அடைந்தனர். தொடர்ந்தும் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

□ இலங்கையின் ஜனாதிபதி பதவியில் ஜெயவர்த்தனா இருக்கும் வரை 83ம் ஆண்டில் இருந்து உருவான வன்முறைகள் ஒழியப்போவதில்லை என்று இலங்கை முன்னாள் பிரதமர் பண்டாரா நாயக்கா கருந்து தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மே 5**

யாழ் நகரில் ஹெலிகொப்ரர்கள் பொதுமக்கள் பயணம் செய்த வாகனமொன்றின் மீது குண்டு வீசித் தாக்கியதில் 4 பேர் ஸ்தலத்தில் மாண்டனர். யாழ்ப் பாணம் அரசு மருத்துவமனையை மூடிவிடுமாறும் மருத்துவச் சேவையை சுற்றியுள்ள வேறு மருத்துவ மனைகளுக்கு மாற்றி விடும் மாறும் இலங்கை அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது மிகவும் அரக்கத் தனமான முடிவு ஆகும்.

□ ஈழப்போராளிகளுடன் இணைந்து ஸ்ரீலங்கா அரசை கவிழ்க்க முயன்றனர் என்ற பேரில் **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. பத்மநாபா** உட்பட தென்னிலங்கையைச் சார்ந்த 23 சிங்கள முற்போக்கு நபர்களுக்கு எதிராக கொழும்பு ஹைகோர்ட்டில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கின் பிரதான எதிரிகளில் ஒருவராக கணிக்கப்படும் தோழர் ஜோ. செனவிரத்னா தனது குற்றப்பத்திரிகை ஆரம்பத்தில் ஏற்க மறுத்து பின்னர் "இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கெதிராகவும் ஒடுக்கப்பட்ட இனத்திற்கெதிராகவும்; இவ்ஜனநாயக விரோத அரசு மேற்கொள்ளும் மிலேச்சத்தனமான ஒடுக்கு முறையை உலகிற்கு அம்பலப்படுத்தும் முகமாகவும் "தமது குற்றப்பத்திரிகையைத் தன்னுடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏனையோர் சார்பாகவும் ஏற்றுக்கொள்வதாக கொழும்பு ஹைகோர்ட்டில் கூறினார் இவ்வழக்கில் முதன் முதலாக தென்னிலங்கையை சார்ந்த களனி பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான செல்வி புல்சரா லியனகே என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

□ யாழ்ப்பாணத்திலுள்ள அரசு மருத்துவ மனையை எடுத்து விடவும் மூடுவதற்கு இலங்கை அரசு முடிவெடுத்ததை கண்டித்து யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

**மே 6**

யாழ் மருத்துவமனையை மூடிவிடும்படி இலங்கை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து நோயாளிகள் பலர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் இதில் பலவறிய மக்கள் சிகிச்சை ஏதும் பெற முடியாத நிலையில் உயிரிழப்பு ஏற்படும் அபாய நிலையில் உள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி என்ற இடத்தில் 3 அப்பாவி ஈழமக்களை இராணுவத்தினர் வெட்டிக் கொன்றனர்.

**மே 7**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இன் முக்கிய தலைவர்களில் ஒருவரும் C. I. T. U. தொழிற் சங்கத்தின தமிழ் மாநிலத்தின் துணைத் தலைவருமாகிய தோழர் வி. பி. சிந்தன் சோவியத் யூனியனில் உள்ள வொல்காகிராட் நகரில் காலமானார். இந்திய தொழிலாளி வர்க்கத்தினை அரசியல் மயப்படுவதில் தோழர் சிந்தனின் பங்கு அளப்பரியதாகும் இந்திய விடுதலைப் போராட்ட வீரரான தோழர் இறுதிவரை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்ப் படையின் முன்னணியில் நின்றார். அன்னாரது மறைவு அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் பேரிழப்பாகும் இவரின் மரணத்திற்கான அஞ்சலியை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு செலுத்தியது.

□ யாழ்ப்பாணப் பகுதிக்கு மேலும் 500 சிறிலங்கா சிப்பாய்கள் நவீன ஆயுதங்களுடன் வந்தடைந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து தற்போது மொத்தம் 20,000 சிறிலங்கா இராணுவத்தினர் யாழில் மாத்திரம் உள்ளனர்.

□ யாழ் வைத்தியசாலை மூடப்படுவதை நிறுத்தும் முயற்சியல் இலங்கை அரசின் உயர் மட்டத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து ஐவர் கொண்ட விஷேச குழு ஒன்று அவசரமாக 6-5-87 கொழும்பு சென்றுள்ளது.

**மே 8**

□ யாழ்ப்பாணம் பிரதான வைத்தியசாலையை உடனடியாக மூடவேண்டும் என்ற சிறிலங்கா அரசின் உத்தரவை அடுத்து, வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பகுதிகள் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்ற பீதியில் யாழ் நகரில் உள்ள மக்கள், வர்த்தகர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

□ தாங்களாகவே சென்று தஞ்சம் புகமுடியாத நிலையில் தமிழ் மக்கள் இப்போது சறிலங்கா அரசின் இராணுவத்தினாலும் கடற்படையினாலும் தடுக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தியக் கப்பல்களை இலங்கைக்கு அனுப்பி தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று பிரதமர் ராஜிவ் காந்திக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் யாழ் வர்த்தக சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**மே 9**

லெபனான் நாட்டில் சிடோன் அருகே உள்ள பாலஸ்தீனிய இலக்குகளை இஸ்ரேலிய போர் விமானங்கள் வெள்ளியன்று தாக்கின. இதில் 10 பேர் மாண்டனர் 25 பேர் காயமுற்றனா. பாலஸ்தீன அகதகள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல்களை பல முறபோக்கு ஜனநாயக நாடுகள், அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



□ கொழும்பில் நடைபெற்ற மேதின ஆர்ப்பாட்டங்களை ஒட்டி சிறிலங்கா பொலிஸரால் கைது செய்யப்பட்ட 6 மாணவர்களை விடுதலை செய்யக் கோரி பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த 20 பல்கலைக்கழக ஆசிரியர்களை, ஊழியர்களை, ஸ்ரீ ஜெயவர்த்தன புரா பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்தனர். பொலீசார் 6 மாணவர்களையும் விடுதலை செய்த பின்னரே பணயக் கைதிகளாக இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ் மே தினத்தில் மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 1 மாணவன் கொல்லப்பட்டான்.

இதே போன்று பெரேதேனியா பல்கலைக்கழக மாணவர்கள் சிலரை பொலிசார் கைது செய்ததைத் தொடர்ந்து மாணவர்கள் 25க்கும் மேற்பட்ட ஆசிரியர் ஊழியர்களை பணயக்கைதிகளாக பிடித்து வைத்தனர் பொலிசார் மாணவர்களை விடுதலை செய்த பின்னர் மாணவர்கள் ஆசிரியர்கள் விடுதலை செய்தனர்.

**மே 10**

எதிர்பார்க்கப்படும் வெளி நாட்டுக் கடன் கிடைக்காவிட்டால் இலங்கையில் விரைவில் கடும் பற்றாக்குறை ஏற்படும் என்று இலங்கை நிதி அமைச்சர் ரோன்னிடிமல் கூறினார். அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் இராணுவச் செலவினங்கள் சிறிலங்கா அரசை மேலும் ஆட்டம் காண வைத்துள்ளது 10-5-87) யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் நடத்திய ஹெலிகெப்டர் தாக்குதலில் 70 வயது முதியவர் ஒருவர் உட்பட 2பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயம் அடைந்தனர்.

**மே 13**

யாழ்ப்பாணம் நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து விமான குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் ஏராளமான வீடுகள், கடைகள் போன்றவை சேதமடைவதுடன் உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றது. தற்போது 1 மாதமாக யாழ் குடா நாட்டில் சிறிலங்கா இராணுவம் கடல், தரை, ஆகாய மார்க்க மாக தாக்குதல் நடத்தி வருகின்றது. புதிய முகாம்களை அமைத்து பலப்படுத்தி முன்னேறி வருகின்றனது. இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் தாவடி என்னுமிடத்தில் இராணுவத்தினர் ஹெலிக்கொப்டரில் இருந்து சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

**மே 14**

மட்டுநகரில் புதூர் என்னும் கிராமத்தை சிறீலங்கா கூலிப் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தினர். அதே வேளை மாங்காமம் என்னும் கிராமத்தை சுற்றி வளைத்து 250 அப்பாவி தமிழர்களை கைது செய்துள்ளனர்.

மேலும் அதே தினத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பன்குளம், இறைகண்டி ஆகிய இடங்களில் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடி தாக்குதலில் மொத்தம் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

□ இலங்கை விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டில் இறந்த 3 ஈழ மக்களின் மரணம் குறித்து பிரேத விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் நீதிபதி விமானப் படையைச் சேர்ந்த விமானிகளையும், விமானப்படை ஊழியர்களையும் கைது செய்யுமாறு பொலீசுக்கு உத்தரவு இட்டுள்ளார்.

○ யாழ்ப்பாணம் தீபகற்பகத்தில் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினர் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். காங்கேசந்துறை சிமெண்ட் ஆலையில் இருந்த மினி இராணுவ முகாம் மூடப்பட்டு அங்கிருந்த இராணுவத்தினர் ஹார்பர் வியூ ஹோட்டலில் உள்ள தலைமை முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மக்களின் எதிர்ப்புக்களை சமாளிக்க முடியாமல் சிறிலங்கா அரசு இவ்வாறு செய்தது.

○ இலங்கையில் விசாக் பண்டிகையையொட்டி விடுதலையாகும் சிங்களக்கைதிகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலையில் குடியேற வேண்டும் என்று இலங்கை அரசு நிபந்தனை விதித்துள்ளது திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்கான செயல்பாடுகளை சிறீலங்கா அரசு இவ்வாறு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

○ பெரிய தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக 2000க்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட பலகவச வண்டிகள் மற்றும் ஏவுகணைகள் உட்பட பெருமளவு ஆயுதங்களுடன் யாழ் தீபகற்பகத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. இத்துருப்புகள் பெரிய தாக்குதலை விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

○ மூதூரில் உள்ள தமிழ் பேசும் மக்களின் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் 7 அப்பாவி பொது மக்களைச் சுட்டுக் கொன்றதுடன் 15 வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இலங்கை அரசு ஈழ மக்களுக்கு எதிராக அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் மேற்கொண்டுள்ளது. இதனால் ஏராளமான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர் என இந்திய ராஷ்டிரபதி ஜைல்சிங் கூறியுள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மே 15**

யாழ்ப்பாணத்தை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது ஸ்ரீலங்கா படையினரின் கடமையாகும் என்று அதிபர் ஜெயவர்த்தனா மீண்டும் திட்டவட்டமாக உத்தரவிட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்து மக்களை கொன்றொழிப்பதில் ஜே. ஆர் இற்கு உள்ள தீவிரம் இதன் மூலமும் அறியப்படுகின்றது.

**மே 16**

யாழ் குடா நாட்டுக்குள் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த பாரிய இராணுவ தாக்குதலை சிறிலங்கா அரசு ஆரம்பித்துள்ளது.

○ இதே தினம் கொழும்பிலிருந்து முல்லைத்தீவிற்கு வந்த சேஃப்டி டிராவலஸ் எனப்படும் தனியார் பஸ் ஒன்று ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு உள்ளாகியதில் ஒரு ஆசிரியை உட்பட இருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர்.

**மே 17**

யாழ்ப்பாணம் மீது விமானத் தாக்குதல் நடத்துவது குறித்து இந்தியா இலங்கையை மீண்டும் எச்சரித்துள்ளது. இதனால் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர் என்றும் சமாதான முயற்சிகள் தடைபடுகின்றது என்றும் இந்தியா கூறியுள்ளது.

○ சிறிலங்கா இராணுவத்தின் கொலை வெறி நடவடிக்கைகளினால் அல்லலுறு மக்களுக்கு உணவுப் பொருட்களை இந்திய அரசு விமானங்கள் ஹெலி மூலம் பரசூட்முறையில் விநியோகிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் கல்யாண சுந்தரம் சேலத்தில் நடைபெற்ற கூட்டம்மொன்றில் பேசியுள்ளார். இச்செய்தியை ஜீவாமுழக்கம் என்ற முற்போக்குப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

**ஈ. பி. ஆர். எல் எப். இலிருந்து டக்ளஸ் தேவானந்தா வெளியேற்றப்பட்டார்.**

28-01-87 ஆம் தேதி அன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் சகல பொறுப்புக்களிலிருந்தும் சகல செயற்பாடுகளிலிருந்தும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகத்தினால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட திரு டக்ளஸ் தேவானந்தா, கடந்த வாரம் நடந்த மத்திய கமிட்டி கூட்டத்தின் முடிவிற்கமைய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

ஈ. பி. ஆர். எல். எப். இனுடைய மத்திய கமிட்டி உறுப்பினராக இருந்த திரு. டக்ளஸ் தேவானந்தா என்பவர்.

(1) மத்திய கமிட்டியின் முடிவுகளுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக செயற்பட்டு வந்ததாலும்.

(2) ஸ்தாபன விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும்,

(3, ஸ்தாபன ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும், குந்தகம் ஏற்படுத்தும் படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும்.

(4) ஸ்தாபன ஜனநாயகத்தை துஷ்பிரயோகம் செய்து அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும்.

இவரை ஸ்தாபனத்தில் சகல பொறுப்புக்கள் டமைகளிலிருந்தும் இடை நிறுத்தி வைத்தது சரியானதே என்பதை இம்மத்திய கமிட்டி அங்கிகரிக்கின்றது.

மேற்கண்ட காரணங்களின் தொடர்ச்சியாகவே சூளை மேட்டு துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்றது என்பதையும், இவரை இடை நிறுத்திய காலத்திலும் கூட இவர் ஸ்தாபன விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதையும் இம்மத்திய கமிட்டி கவனத்திலெடுந்துக் கொண்டது.

இதன் பிரகாரம் 'இவரை ஈ. பி. ஆர். எல். எப். இனுடைய சகல பொறுப்புக்கள் செயற்பாடுகளிலிருந்தும் மாத்திரமில்லாமல் ஸ்தாபன உறுப்பினர் எனும் நிலையில் இருந்தும் முற்று முழுதாக வெளியேற்றப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு இன்று ஈ. பி. ஆர். எல். எப். இனால் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது

**மே 19**

இராணுவம் நடத்திய தாக்குதலில் பளை மார்க்கெட்டில் செல் வெடித்ததில் கட்டடம் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டதுடன் 25 பேர் கொல்லப்பட்டனர். 18ம் 19ம் தேதிகளில் யாழ்குடா நாட்டில் சுழிபுரம், தொல்புரம், வசாவிளான், யாழ்நகர் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட ஹெலிகாப்டர், செல் தாக்குதல்களில் 50 இற்கும் மேற்பட்ட குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

○ இலங்கை இராணுவத்திடமிருந்து ஈழத் தமிழர்களை பாதுகாக்க இந்திய அரசு ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலை அணுக வேண்டும் என்று இந்திய மார்க்சியப் பொது உடைமைக்கட்சி (எம். சி. பி. ஐ) தனது பத்திரிகைச் செய்தியொன்றில் கேட்டுள்ளது. இதுபற்றி மாநில அமைப்பாளர் பெ. மணியரசன் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட செய்தியில் யாழ்ப்பாணத்து மக்களையும் ஈழப் போராளிகளையும் அழிக்கும் இலங்கை. இராணுவத்தின் நடவடிக்கைகளை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு

www.tamilarangam.net



வர இந்தியா முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

**மே 20**

யாழ்ப்பாண மாவட்டத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் திட்டத்தின் ஒரு அம்சமாக யாழ்ப்பாணம் கண்டி வீதியில் முகாமை அமைப்பதெனவும் முதற்கட்டமாக ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பளை எனும் இடத்தில் புதிய இராணுவ முகாமை அமைப்பதெனவும் சிறிலங்கா ராணுவம் திட்டமிட்டுள்ளது. இதனால் பளை கிராமத்தில் மறைந்துள்ள போராளிகளை விரட்டுவதற்காக குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அதே சமயம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் பளையில் முகாம் அமைப்பதற்காக ஆனையிறவை நோக்கி கவச வண்டிகள், இயந்திர துப்பாக்கிகள் சகிதம் சென்று கொண்டிருக்கின்றனர்.

**மே 21**

யாழ்மாவட்டத்தில் புதிய இராணுவ முகாம்களை அமைக்கப்போவதாக கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்துள்ளான். இதற்கென 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட புதிய இராணுவத்தினர் (இவர்கள் அனைவரும் பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகளினால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்) யாழ்குடா நாட்டிற்கு இராணுவ விமானம், கடற் கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்துள்ளனர்.

**மே 22**

வீரமணி, நெடுமாறன் ஆகியோரின் உண்மைகளை மறைப்பதும் கண்மூடித்தனமான துணிவும் ஈழமக்களின் போராட்டத்திற்கு உதவாது என்று 19-5-87 அன்று பத்திரிகைகளில் வந்த வீரமணி நெடுமாறனின் அறிக்கை குறித்த தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தி ஈ. பி. ஆர். எல். எப் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பிட்டுள்ளது. மேலும் இவ் அறிக்கையில் இன்றைய காலகட்டத்தில் ஈழ விடுதலைக்கு அத்தியாவசியமானது இயக்கங்களிடையே ஒற்றுமை இவ் ஒற்றுமைக்கு முதல் எதிரியாக இருப்பது எல் டீ. டீ. ஈ. ஆகும். மேலும் மக்களின் பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் போன்றவற்றை ஈழத்தில் மக்களுக்கு மறுத்து சமூக விரோத செயல்களில் ஈடுபடுவது தமிழீழ விடுதலைப் புலிகளே. மேலும் ஏனைய இயக்கங்கள் பகிரங்கமாக இயங்குவது விடுதலைப் புலிகளால் ஆயுத முனையால் தடுக்கப்பட்டிருக்கின்றதே ஒழிய மக்களால் அல்ல இதுபோன்ற யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு முழு விடுதலைப் போராட்டத்தில் உதவுபவர்களாக வீரமணி, நெடுமாறன் போன்றோர் தமது பாரபட்சமற்ற உழைப்பை ஈழ விடுதலைக்கு நல்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மே 23**

இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்தியா எடுத்துவரும் நல்லெண்ண முயற்சிகளுக்கு இலங்கை ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகின்றது. மேலும் இச்செய்தியில் இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தை நடைபெற வேண்டின் இதில் இலங்கையில் உள்ள கம்யூனிஸ்டு கட்சி, சிறிலங்கா மகாஜன கட்சி, நவ சமாஜ கட்சி போன்றவற்றின் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மே 25**

சிறிலங்கா அரசின் படுகொலை சம்பவத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு வழங்கிய 4 கோடி ரூபாய் நிதியை ஈழவிடுதலை இயக்கங்களும் ஈழமக்களும் வரவேற்றிருக்கும் அதே வேளையில் சிறிலங்கா அரசு இப்பணம் 'பயங்கரவாதிகளுக்கு' ஆயுதம் வாங்க வழங்கப்பட்டதாக குற்றம் சாட்டியது. இதனை தமிழக அரசு வன்மையாக கண்டித்து மறுத்ததுடன் இப்பணம் யாவும் தமிழக மக்களிடமிருந்து கடந்த காலத்தில் வசூல் செய்யப்பட்டது என்றும் கூறியுள்ளது.

யாழ்குடா நாடு மீதான பாரிய தாக்குதலை நடத்துவதற்காக பல ஆயிரம் சிறிலங்கா இராணுவத்தினர் மருத்துவர்கள், இராணுவ விமானங்கள், கடற்படை கப்பல்கள் யாழ்நோக்கி சென்ற வண்ணம் உள்ளன. இன்னும் சில தினங்களில் பெரும் தாக்குதல் ஒன்று நடைபெறலாம் என்று கொழும்பில் இருந்து கிடைத்த இரகசியச் செய்தியொன்று கூறுகின்றது இதே வேளை இராணுவத்தாக்குதல்களை நடத்த வேண்டாம் என்று இலங்கையை இந்தியா மீண்டும் வற்புறுத்தியுள்ளது.

**மே 26**

யாழ்ப்பாணக்குடாநாட்டில் 48 மணி நேர ஊரடங்கு சட்டத்தை சிறிலங்கா அரசு பிறப்பித்துள்ளது மேலும் இன்று காலை 6 - 30 மணியளவில் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளில் ஹெலியில் இருந்து சிறிலங்கா இராணுவம் போட்ட துண்டுப் பிரசுரத்தில் நாவாந்துறை சென்ற்மைக்கல் ஆலயம் யாழ் ஸ்ரான்லி கல்லூரி, கொழும்புத்துறை ஆலயம், உடுவில் பெண்கள் கல்லூரி உரும்பிராய் இந்துக் கல்லூரி, நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, நெடியகாடு பிள்ளையார் கோவில், இமையாளன் வைரவர் கோவில், இமையாளன் லிங்கேஸ்வரன் கோவில், கொற்றாவத்தை வைரவர் கோவில், திக்கம் கண்ணகை அம்மன் கோவில், கிளாலித்

www.tamilarangam.net



தோட்டம் அம்மன் கோவில், தச்சன் தோப்பு பிள்ளையார் கோவில், புத்தூர் பிள்ளையார் கோவில், வல்லிபுரம் கோவில், சுடடிபுரம் அம்மன் கோவில், பருத்தித்துறை சென்ற் அந்தோனி ஆலயம், வல்வெட்டி பிள்ளையார் கோவில். போன்ற இடங்களில் 2 மணி நேரத்திற்குள் மக்களை ஒதுங்கச் செல்லுமாறு சிறீலங்கா அரசு வற்புறுத்தியது காலை 8 - 30 மணியளவில் சிறீலங்கா இராணுவம் 'ஹெலி' மூலம் வரணி, மந்திகை, போன்ற இடங்களில் இறக்கப்பட்டனர். இதே வேளை வடமராட்சி பகுதியில் பல பகுதிகளை விமானங்கள் குண்டு வீசின வல்வெட்டித்துறை, பலாலி, பருத்துறை, தொண்டமனாறு, காங்கேசன் துறை போன்ற இராணுவ முகாம்களில் இருந்து இராணுவம் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி முன்னேறியது.

சிறீலங்கா இராணுவத்தின் இவ் நடவடிக்கைகளால் பல நூறு பொதுமக்கள் மரணமடைந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

ஈழமக்களை அழிக்கும் பணியில் நேரடியாக ஈடுபடுகின்ற அத்துலக் முதலி கண்ணில் பட்டவர்களை சுட்டுக்கொல்லவும் நகரங்கள், ஆலயங்கள் மீது குண்டு வீசவும் உணவு விநியோகத்தை தடை செய்யவும் என போர் முனையில் சிறிலங்கா இராணுவத்திற்கு உத்தரவிட்டான் 15 இராணுவ விமானங்கள் குண்டு வீச்சிலீடுபட்டன. 150 பேர் உடல் கருகி மாண்டனர் 500இற்றும் மேற்பட்டோர் பலத்த காயத்திற்குள்ளாகினர். மக்கள் தஞ்சமடைந்த ஆலயங்கள், பாடசாலைகள் மீது குண்டு வீசி சிறீலங்கா இராணுவம் வெறியாட்டம் ஆடியது. வடமராட்சி சிறீலங்கா இராணுவத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளது. மக்களைக் காப்பாற்றாமல் புலிகள் ஓட்டம், ஈழமக்கள் யாரும் அற்ற நிலையில் அனாதைகளாக தவிப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈழப்போராளிகள் நிவாரண வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

○ ஈழத்தமிழர் தற்போது வாழ்வதா? சாவதா? என்பதை எதிர் நோக்கியுள்ளனர் யாழ்ப்பாணத்தில் பல முக்கிய இடங்களில் இராணுவம் வந்துவிட்டது பல நூறு பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். இந்நிலையில் தமிழகம் ஈழத்தமிழர் அழிவதைக் கண்டு வாய்மூடி மௌனமாக இராமல் ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் எம். ஜி. ஆரும் கலைஞர் கருணாநிதியும் தமிழக மக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எப். வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

**மே 28**

ஈழமக்களை குறிப்பாக தற்போது யாழ் மக்களை பூண்டோடு அழிக்கும் வேலையில் சிறிலங்கா இராணுவம் இறங்கியுள்ளது இந்நிலையில் இம்மக்களை காக்க தமிழக மக்களும், அரசியல் கட்சிகளும் முன் வர வேண்டுமென்று தோழர் பத்மநாபா அறை கூவல் விடுத்துள்ளார். இதில் தாமதம் ஏற்பட்டால் ஈழமக்கள் பூண்டோடு அழியும் நிலைதான் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

○ யாழ்ப்பாணத்தின் மீது முப்படை தாக்குதல் ஏவப்பட்டிருப்பதால் ஏற்படும் விபரீத விளைவுகளுக்கு சிறீலங்கா அரசே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ஜே. ஆர். ஐ ராஜீவ் எச்சரித்துள்ளார் ஆனாலும் இதனை பொருட்படுத்தாது யாழ், குடா நாட்டின் மீது மேலும் உக்கிரமான முப்படைத்தாக்குதல் நடாத்த ஜே. ஆர் உத்தரவிட்டுள்ளான் இன்று 3வது நாளாக யாழ்பாணத்தின் பல பகுதிகளில் விமானங்களிலிருந்துகுண்டு வீசப்பட்டது. வடமராட்சிய பகுதியில் சிறீலங்கா இராணுவப் பல புதிய முகாம்களை அமைத்து கிராமங்களில் புகுந்து மக்களை கொன்று குவித்து வருகின்றது 200இற்கு மேற்பட்டோர் இன்று கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

---

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினா மீது வஞ்சத்தனமாக இராணுவ மேலாதிகத்தைத் செலுத்திய 13 டிசம்பர் 86 முதல் இன்று வரை சிறீலங்கா இராணுவத்தின் சில முன்னேற்றங்கள் !
இவை அனைந்தும் ஈழ விடுதலையின் பின்னடைவுகள் !!

- மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈழப் போராளிகளின முக்கிய தளமாக விளங்கிப கொக்கட்டி சோலையை சிறீலங்கா இராணுவம் கைப்பற்றியது. இங்கு புதிதாக 3 இராணுவ முகாம்களை இராணுவம் அமைத்தது. பல நூறு மக்கள் படுகொலை.
- மன்னர்-வவுனியா மாவட்டங்களில் 9 புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. இப் பிரதேசங்கள் யாவும் ஈழப் போராளிகளின் வசமிருந்து இராணுவத்தினர் வசம் வந்தது.
- ஆனைஇறவு—வவுனியா பிரதான வீதி இராணுவத்தின் பூரணகட்டுப்பாட்டிற்குள் வந்தது. போராளிகளின் கேந்திர முக்கியத்துவம் நிறைந்த பரந்தன் சந்தியில் இராணுவம் புதிய முகாம் அமைத்துக் கொண்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியேறி அருகில் உள்ள தொலை பேசிக்கட்டம், பொலிஸ் விடுதி ஆகியவற்றில் இராணுவம் புதிய இரண்டு முகாம்களை அமைத்தது. அருகில் உள்ள கொட்டடி என்ற கிராமம் இராணுவத்தினரின் கட்டுப்பட்டிற்குள் வந்தது.
- பலாலி, வசாவிளான் இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள பல கிராமங்கள் மீது இராணுவம் முன்னேற்றம். கட்டுவன், புன்னாலைக் கட்டுவன், தோலகட்டி, மயிலிட்டி போன்ற இடங்களில் புதிய இராணுவமுகாம்களை இராணுவம் அமைந்தது.
- இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் தமிழீழ விடுதலைப் புலிகளின் மிகவும் பலம் வாய்ந்த தளமாகிய வடமராட்சி (யாழ்குடா நாட்டின் பரப்பளவில் 1/3 பகுதி) முழுவதும் இராணுவத்தின கட்டுப்பாட்டிற்குள் வந்தது 10 இற்கும் மேற்பட்ட புதிய இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. 3000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் பலி காலை 3500 இற்கு மேற்பட்ட ஈழமக்கள் கைது பல ஆயிரம் பேர் படுகாயம். அனைத்து இயக்கங்களும் ஐக்கியப்பட்டுப்பட்டு போராடிய போது இவ்வளவு பெரிய இழப்புக்கள் ஈழமக்களுக்கு ஏற்படவில்லை. **ஈழமக்களின் விடுதலைக்காக போராடும் ஏனைய இயக்கங்கள் மீது இராணுவத்தாக்குதலை மேற்கொண்டு ஈழவிடுதலை இயக்கங்களை பலவீனப்படுத்திய பின்பு ஈழமக்களுக்கு இவ்வளவு பாரிய இழப்புக்கள்.**

ஈழமக்களே இந்தியமக்களே ஏனைய உலக நாடுகளில் வாழும் தமிழ் மக்களே சிந்தியுங்கள் புலிகள் உண்மையில் ஈழ விடுதலையில் விசுவாசம் உள்ளவர்களா.........?

## இதுவரை புலிகளால் கொல்லப்பட்ட சிறீலங்கா இராணுவத்தைவிட புலிகளால் கொல்லப்பட்ட ஈழப் போராளிகள், பொதுமக்களின் எண்ணிக்கை அதிகம்

---

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈழ வானொலி

உண்மைகளையும், நியாயங்களையும் கண்டு கிலி கொள்ளும் சிறிலங்கா அரசும், மனித விரோத பாசிச நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பல கோடி செலவில் நவீன கருவிகளை இறக்குமதி செய்து **'ஈழ வானொலி'** நிகழ்ச்சிகளைக் குழப்பிக்கொண்டிருக்கின்றன.

தினம் தோறும் காலை 6 - 30 மணி, 10 - 30 மணி பி. ப 3 - மணி இரவு 9 - 15 மணி ஆகிய நேரங்களில் சிற்றலை (SW) மீட்டர் 7000 KH (கிலோ ஹேட்ஸ்) அலை வரிசையில் ஒலிபரப்பைக் கேட்கும் போது; இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ சற்று திருப்பி நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகக் கேட்கவும்!

---

## வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை போராட்டம்!

PRINTED MATTER

★EPIC

20, First Street,
Zacaria Colony,
Choolaimedu,
MADRAS - 600 094
(Post Bag : 5551)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

***EPIC : B. M. Box 1038, London WC1 N 3xx, UE.***
***EPIC : 10, Ruedes Maruyrs, 75009 Paris, France.***

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்